Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 16 2025

திங்கட்கிழமை 16, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 261 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# ஈரானுடன் கூட்டு சேர்ந்து இஸ்ரேலை தாக்கும் ஹவுதி

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டனர். முதல் முறையாக ஒருங்கிணைந்து இஸ்ரேலை தாக்குவதாக ஹவுதி படையினர் வெளிப்படையாக அறிவித்துள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமையகம், எரிசக்தி உற்பத்தி மையங்களை குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டது. பதிலுக்கு ஈரான் தரப்பு மேற்கொண்ட ஏவுகணை தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 3 பேர் உயிரிழந்தனர். இதை இஸ்ரேல் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இருதரப்புக்கு இடையே மோதல் தொடர்கின்ற காரணத்தால் அணுசக்தி திட்டம் தொடர்பாக ஈரான் மற்றும் அமேரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டது. இஸ்ரேல் - ஈரான் மோதல் எப்போது முடிவுக்கு வரும் என்ற கேள்வியும் இப்போது எழுந்துள்ளது. உலகத் தலைவர்கள் இந்த மோதல் கூடாது என வலியுறுத்தி உள்ளனர்.

தங்கள் தேசத்தை நோக்கி எதிரிகள் ட்ரோன் தாக்குதல் மேற்கொண்டவதாகவும், அதை இஸ்ரேல் வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து அழித்துள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது. இருப்பினும் இந்த ட்ரோன் எங்கிருந்து வந்தது என்பதை இஸ்ரேல் தெரிவிக்கவில்லை.

**ஈரானுக்கு பாகிஸ்தான் ஆதரவு:** ஈரானுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிப்பதாக அந்த நாட்டின் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



# கீதா கோபிநாத் வந்தடைந்தார்

சர்வதேச நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை (15) வந்தடைந்தார்.

இலங்கையை வந்ததன் பின்னர் கருத்து தெரிவித்துள்ள அவர், பொருளாதார சவால்கள் பிராந்தியத்திற்கான வாய்ப்புகள் குறித்தும் சர்வதேச நாணய நிதியம் இவற்றிற்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம் என்பது குறித்தும் அறிந்துகொள்வதற்காக அதிகாரிகள், சிவில் சமூகத்தினர், வர்த்தக சமூகத்தினருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2005ம் ஆண்டின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் தடவை என்பதால் அவரது இரண்டு நாள் விஜயம் முக்கியத்துவம் மிக்கதாக காணப்படுகின்றது.

இலங்கை விஜயத்தின் போது, நிதியமைச்சு மத்திய வங்கி, சர்வதேச நாணயநிதியம் ஆகியவை இணைந்து நடத்தும் மீட்சிக்கான மாநாட்டில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், இலங்கை அதிகாரிகளுடனும் இலங்கை சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றிற்கு இடையிலான ஈடுபாட்டுடன் தொடர்பு பட்டவர்களுடனும் கீதா கோபிநாத் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.





## ஜனாதிபதி நிதி சேவைகள்

# ஜூன் 21 முதல் இணைய வழியில் பெறலாம்

ஜனாதிபதி நிதியத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் ஜூன் 21 முதல் இணைய வழியில் வழங்கப்படும்.

ஜனாதிபதி நிதியிலிருந்து பொதுமக்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் சேவைக்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி 07ஆம் திகதி முதல் நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதால், ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் இவ்வாறு விரிவுபடுத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, வறுமை ஒழிப்பு நிவாரணங்கள், கல்விப் புலமைப்பரிசில் வழங்குதல், கல்வியில் சிறந்து விளங்கும் பிள்ளைகளை பாராட்டுதல், விசேட தேவைகள் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், காட்டு யானைகளால் பாதிக்கப்படும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை, தேசிய அளவில் அல்லது நாட்டிற்காக சேவை செய்தவர்களைப் பாராட்டுதல், விபத்துகள் மற்றும் அனர்த்தங்களின் போது வழங்கப்படும் நிவாரணங்கள் உள்ளிட்ட ஜனாதிபதி நிதியத்தினால் செயற்படுத்தப்படும் அனைத்து சேவைகளுக்கும், பொதுமக்களுக்கு நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களின் ஊடாக இணைய வழியில் விண்ணப்பிக்க முடியும்.

தொடர்ச்சி P2



# கொழும்பு மேயர் யார்?

நாட்டின் மிகப்பெரிய உள்ளூராட்சி மன்றமாக கொழும்பு மாநகர சபையை அமைப்பதற்கான முடிவு திங்கட்கிழமை (16) எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே. 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையை தேசிய மக்கள் சக்தி கட்சி வென்றது.ஆனால், அந்தக் கட்சியால் பெரும்பான்மையான சபை உறுப்பினர்களைப் பெற முடியவில்லை.

இதன் விளைவாக, மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான தொடக்கக் கூட்டத்தை திங்கட்கிழமை (16) நடத்துவதற்கு மேற்கு உள்ளூராட்சி ஆணையர் முடிவு செய்துள்ளார். அதன்படி, கூட்டம் திங்கட்கிழமை (16) காலை 9.30 மணிக்கு மாநகர சபை கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை தாங்கள் கைப்பற்றுவோம் என தேசிய மக்கள் சக்தி சூளுரைத்துள்ளது. எனினும், கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை தாங்களே நிறுவுவோம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சில உறுப்பினர்கள் கடைசி நேரத்தில் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளக்கூடும் என்பதால், கொழும்பு மேயராக யார் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதை கணிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

"சமூக கூட்டணியின் 29 உறுப்பினர்கள் நம்பகமானவர்கள், ஆனால் பிரச்சினை சுயேச்சைக் குழுக்கள் உட்பட மற்றவர்களுடன் உள்ளது," என்று மரிக்கார் தெரிவித்தார்.

"சர்வஜன பலயாஉறுப்பினர்கள் சிலர் சில உள்ளூராட்சி மன்றங்களில், தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்க ஒருதலைப்பட்சமாக முடிவு செய்துள்ளனர்," என்றார்.

மேலும், மற்ற கட்சிகளுடன் உடன்பட்டதின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் வெற்றி நாளைய (இன்று) வாக்கெடுப்பின் முடிவுகளிலிருந்து தெரியும் என்று அவர் கூறினார்.

உள்ளூராட்சி சட்டத்தை மேற்கோள் காட்டி, மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு ரகசிய வாக்கெடுப்பாக இருக்க வேண்டுமா அல்லது திறந்த வாக்கெடுப்பாக இருக்க வேண்டுமா என்பதை உறுப்பினர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் கூறிய மரிக்கார் கூறினார். ரகசிய வாக்கெடுப்பு அல்லது திறந்த வாக்கெடுப்பு நடத்தப்படுமா என்பதைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பு 'பெயர் சார்ந்த வாக்கெடுப்பாக' இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

## வெளிநாட்டு ஒதுக்கீடு

# 1.4 பில்லியன் டொலரினால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது

'இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் அறிக்கையிடல் குறித்து FactCheck.lk இன் கவலைகள்'எனும் புதிய விளக்கக்குறிப்பின் படி,இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடு சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலரினால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கல், சீன மக்கள் வங்கியுடன் (People's Bank of China PBoC) உள்ள RMB 10 பில்லியன் (USD 1.4 பில்லியன்) பெறுமதியான நாணய பரிமாற்றத்தை ஒதுக்கீடாக சேர்த்ததிலிருந்து உருவாகியுள்ளது. இது தற்போது சர்வதேச அளவில் வெளிநாட்டு ஒதுக்கீடாக கருதப்பட வேண்டிய தரநிலையை பூர்த்தி செய்யவில்லை.

சர்வதேச நாணய நிதியம் (IMF) வெளியிட்டுள்ள 'Balance of Payments Manual, 6th edition'அறிக்கைக்கு அமைய,வெளிநாட்டு சொத்து இருப்பானது திரவத்தன்மையை கொண்டிருக்க வேண்டும் அல்லது நிபந்தனையற்ற முறையில் உடனடியாகக் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஆனால், PBoC நாணய பரிமாற்றம் இதனை நிறைவேற்றத் தவறியுள்ளது. ஏனெனில், பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் குறித்த நிபந்தனைகள் நீக்கப்படுவதற்கான சாத்தியமும் காணப்படுகின்றது.

தொடர்ச்சி P2



# நாடு திரும்பினார் ஜனாதிபதி

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஜேர்மனிக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை (15) காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்தார்.

அவருடன் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் ஆகியோரும் நாடு திரும்பினர்.

# "முஹம்மத்திடமிருந்து நிறைய கற்க வேண்டும்"



முன்னாள் சபாநாகயகர் எம்.எச்.முஹம்மத்திடமிருந்த நிறைய கற்கவேண்டும் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மனிதர்களை வாழ வைக்கும் பயணத்திற்கான அடிப்படை காரணிகளை அடையாளம் கண்டு அடிமட்டத்தில் இருந்து சிறந்த சேவைகளை அவர் ஆற்றியுள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2

# அதிபர் தர ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

பல கோரிக்கைகளை முன்வைத்து, இம்மாதம் 16 ஆம் திகதி முதல் அனைத்து அதிபர் தர ஆசிரியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்று, அதிபர் தர ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிமல் முடிங்கொட்டுவ தெரிவித்தார். அனைத்து அதிபர் தர ஆசிரியர்களையும் பாதிக்கும் பல பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நடந்த பேச்சுவார்த்தைகள் பலனளிக்காததால், தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.


தொடர்ச்சி P2

# பேராசிரியர் எஸ்.தில்லைநாதனின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம் சுன்னாகமத்தில் 1937.05.03 ஆம் திகதி பிறந்த பேராசிரியர் எஸ். தில்லைநாதன் கடந்த வியாழக்கிழமை(12) அன்று கொழும்பில் வைத்து காலமானார். இவரது இறுதிக்கிரியை கள் ஞாயிற்றுக்கிழமை (15) அன்று கொழும்பில் இடம்பெற்றன.

பேராதனை மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைப் பெற்ற பேராசிரி யர் எஸ்.தில்லைநாதன், செய்தியாளராக கொழும்பில் தமது பணியை ஆரம்பித்தார். பின்னர், பல்க லைக்கழகக் கல்விப் பணிகளில் இணைந்து, விரிவுரையாளராக மட்டுமின்றி உயர் பதவிகளையும் வகித்ததோடு, ஊடகத்துறையோடும் தொடர்பினைக் கொண்டிருந்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப் பினராகவும் கடமையாற்றிய இவர் ஓய்வு பெறும் வரை தமிழ் துறைத் தலைவராகவும்.



தொடர்ச்சி P2

## மகாத்மா காந்தியின்

# கொள்ளு பேத்திக்கு 7 ஆண்டுகள் சிறை



தென் ஆபிரிக்க தொழிலதிபர் ஒருவரிடம் ரூ.3.22 கோடி பண மோசடி செய்த குற்றச்சாட்டில், மகாத்மா காந்தியின் கொள்ளு பேத்தி ஆசிஷ் லதா ராம்கோபின்னுக்கு, டர்பன் நீதிமன்றம் 7 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஈரானுடன் கூட்டு சேர்ந்து இஸ்ரேலை தாக்கும் ஹவுதி

இது தொடர்பாக ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் உடன் ஷெபாஸ் ஷெரிப் பேசியுள்ளார். ஈரான் மீதான இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து இந்த இக்கட்டான நேரத்தில் தங்கள் தேசம் ஈரானுக்கு ஆதரவாக நிற்பதாக ஷெபாஸ் ஷெரிப் கூறியுள்ளார்.

**இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சிபடையினர் தாக்குதல்:** ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டனர். முதல் முறையாக ஒருங்கிணைந்து இஸ்ரேலை தாக்குவதாக ஹவுதி படையினர் வெளிப்படையாக அறிவித்துள்ளனர்.

இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடி தரும் வகையிலும், ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மற்றும் ஈரான் மக்களின் தரப்பில் இருந்து ஈரான் இராணுவ நடவடிக்கைக்கு உறுதுணையாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டோம் என ஹவுதி செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை ஹவுதி படையினர் மேற்கொண்டனர்.

**ட்ரம்ப் எச்சரிக்கை:** எந்த வகையிலாவது அமெரிக்காவை ஈரான் தாக்கினால் அதன் விளைவுகள் தீவிரமாக இருக்கும் என அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார். "ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை எளிதாகச் செய்து, இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவர முடியும்" என தனது சமூக வலைத்தளத்தில் ட்ரம்ப் கூறியுள்ளார்.

**தாக்குதலும் பதிலடியும்:** அணுகுண்டு தயாரிப்பில் தீவிரம் காட்டுவதாக கூறி 'ஆபரேஷன் ரைசிங் லயன்' என்ற பெயரில் ஈரான் மீது இஸ்ரேல் வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் விமானப் படையின் 200 போர் விமானங்கள், ஈரானில் 100 இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தின. இதில் ஈரானின் அணுசக்தி தளங்கள் அழிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 6 அணு விஞ்ஞானிகள், இராணுவ தளபதிகள் 3 பேர் உட்பட 78 பேர் உயிரிழந்தனர். 320 பேர் காயம் அடைந்தனர்.

முதல்கட்ட தாக்குதலின் தொடர்ச்சியாக, வெள்ளிக்கிழமை மாலையும் இஸ்ரேல் மீண்டும் ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதில் 200 இடங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதல்களுக்குப் பதிலடி தரும் வகையில், இஸ்ரேல் மீது ஈரான் சனிக்கிழமை அதிகாலையில் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தத் தொடங்கியது.

'ஆபரேஷன் ட்ரூ பிராமிஸ்' என்று பெயரிட்டு பதிலடியாக ஈரான் வீசிய ஏவுகணைகள் மூலம் 'அயர்ன் டோம்' வான் பாதுகாப்பையும் மீறி, இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் உள்ள இராணுவத் தலைமையகம் தாக்குதலுக்கு உள்ளானது. ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகள் மீதும் குண்டுகள் விழுந்தன. இந்த தாக்குதல்களில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இஸேரலின் அனைத்து பகுதிகளும் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தகவல்கள் வெளியாகின. பரஸ்பரம் குற்றச்சாட்டு: "மத்திய கிழக்கில் தற்போதைய பதற்றத்துக்குக் காரணமே ஈரான் தான். அணு ஆயுதங்களைத் தயாரித்து இஸேரலை அழிக்க ஈரான் திட்டமிடுகிறது. அதனால்தான் நாங்கள் அணு ஆயுதத் தளங்களைக் குறிவைத்து துல்லிய தாக்குதல் நடத்தினோம். ஆனால், இஸ்ரேலின் மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல் நடத்துகிறது" என்று இஸ்ரேல் இராணுவ செய்தி தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் நடாவ் ஷோசானி தெரிவித்தார்.

அதேவேளையில், ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி, "இஸ்ரேலுடன் போரிட ஈரான் ராணுவப் படைகள் தயார் நிலையில் உள்ளன. ஈரான் மக்கள் அனைவரும் ஈரான் ராணுவத்துக்கு ஆதரவாக உள்ளனர்" என்றார்.

மேலும், இஸ்ரேலுக்கு இராணுவ உதவிகளை இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் வழங்கினால், ஈரானில் உள்ள அந்த மூன்று நாடுகளின் நிலைகள் மீதும் குறிவைத்துத் தாக்குவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்தது. இந்தப் பின்னணியில், "ஈரானின் ஏவுகணை தாக்குதல் தொடரும் பட்சத்தில், அந்நாட்டின் தலைநகரான தெஹ்ரான் பற்றியெரியும்" என இஸ்ரேல் அரசு எச்சரிக்கை விடுத்தது கவனிக்கத்தக்கது.

# ஜூன் 21 முதல் இணைய வழியில் பெறலாம்

இந்த வேலைத்திட்டத்துடன் 47 வருட காலமாக கொழும்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி நிதியத்தின் அனைத்து சேவைகளையும், இலங்கையின் அணைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி தலைமையிலான ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாகக் குழு மேற்கொண்ட தீர்மானத்தின் படி, பொதுமக்களுக்கு இந்த வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருப்பதுடன், இதன் ஊடாக அதிகமான மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இதன் ஊடாக ஜனாதிபதி நிதியத்தை தவறாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

# 1.4 பில்லியன் டொலரினால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது

அந்த வகையில்,வெளிநாட்டு ஒதுக்கீடாக அங்கீகரிக்கப்படாத சொத்துகளைச் சேர்ப்பதனால் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடு மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது. உதாரணமாக, 2025 மே மாதத்தில், மத்திய வங்கி அறிவித்த உத்தியோகபூர்வ ஒதுக்கீடு 6.3 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. சர்வதேச தரநிலைக்கேற்ப கணக்கிட்டிருந்தால், இது சுமார் 4.9 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்திருக்க வேண்டும்.

மேலும், இந்த தவறான கணக்கீட்டைப் பயன்படுத்தி அரசியல்வாதிகளும், பொது அதிகாரிகளும் இரண்டு விதமான கணக்கீடுகளை (PBoC பரிமாற்றம் சேர்த்ததும், சேர்க்காததும்) பயன்படுத்தி, ஒரு காலப்புள்ளியிலிருந்து மற்றொரு காலப்புள்ளிவரை வெளிநாட்டு ஒதுக்குகளின் அதிகரிப்பை ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய முயற்சித்துள்ளனர். இதனால் 2022 ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் வெளிநாட்டு ஒதுக்கங்களின் அதிகரிப்பு தொடர்பில் தவறான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன.சர்வதேச தரநிலைகளுடன் ஒத்துப்போகும் பரிந்துரைக்கப்பட்ட அணுகுமுறை என்னவெனில், IMF தனது ஊழியர் அறிக்கைகளில் 'பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒதுக்கம் (usable reserves) என குறிப்பிடும் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீடு செய்வதே ஆகும். இதில் பரிமாற்ற ஒப்பந்தம் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கச் சொத்துகளுக்கான வரையறையை பூர்த்தி செய்யாத எந்தவொரு சொத்தும் உள்வாங்கப்படாது.

# பேராசிரியர் எஸ்.தில்லைநாதனின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது

பேராசிரியராகவும் பணியாற்றி னார். நெருங்கிய தமிழ் இலக்கியம் மற்றும் கலாசார ஆய்வுகளில் ஆழ்ந்த பங்களிப்புச் செய்த பேராசிரியர். 1974ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற தமிழ் கல்வி மாநாட்டில் *'Recent trends in CeylonTamil literature'* என்ற தலைப்பில் ஆற்றிய உரை தமிழ் கல்வி வரலாற்றில் நினைவு கூரத்தக்கதாகும்.

பல நூல்கள், கட்டுரைகள். கல்வித் திட்டங்கள், மாணவர் வழிகாட்டுதல்கள் என அவர் விட்டுச் சென்ற கல்வித் தடங் கள் அழியாதவை. இலங்கை தமிழியல் வளர்ச் சிக்காக அவர் செய்த பங்களிப் புக்காக, 1961ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழக விகுது, 1993ஆம் ஆண்டு சுலக்கிய செம்மல் மற்றும் 1994 ஆம் ஆண்டு கலாகீர்த்தி ஆகிய உயர் விருதுகளையும் பெற்றிருந்தார்.

# அதிபர் தர ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

அதன்படி, தற்போதைய அதிபர் கொடுப்பனவு அதிகரிக்கப்படும், மேலும் ஒவ்வொரு தர ஆசிரியருக்கும் அதிபர் கொடுப்பனவு, தொலைபேசி கொடுப்பனவு, பதவி உயர்வுக்குப் பிறகு அடிப்படை சம்பளத்தைக் குறைக்கும் சுற்றறிக்கையில் உடனடி திருத்தம், மற்றும் அதிபர் பதவிகள் கொள்ளையடிக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவது ஆகியவை நேர்மறையான தீர்வு காணப்படும் வரை தீர்க்கப்படும் என்று நிமல் முடிங்கொட்டுவ கூறினார்.

அதன்படி, ஜூன் 16 ஆம் திகதி முதல், அனைத்து கடமைகளும் காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும், மதியம் 1.30 மணிக்குப் பிறகு அதிபர்கள் எந்த அதிகாரப்பூர்வ நடவடிக்கைகளிலும் ஈடுபட மாட்டார்கள் என்றும் தலைமைச் செயலாளர் நிமல் முடிங்கொட்டுவ மேலும் தெரிவித்தார்.

# கொள்ளு பேத்திக்கு 7 ஆண்டுகள் சிறை

அவர் தற்போது ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் கொள்ளு பேத்தி ஆசிஷ் லதா ராம்கோபின்(56). இவர் அகிம்சைக்கான சர்வதேச மையம் என்ற தொண்டு நிறுவனத்தின் நிறுவனராகவும், செயல் இயக்குநராகவும் உள்ளார்.

இவர் தென்னாபிரிக்காவில் உள்ள 'நியூ ஆப்ரிக்கா அலையன்ஸ்' என்ற காலணி விநியோக நிறுவனத்தின் இயக்குநர் மகாராஜ் என்பவரைச் சந்தித்துள்ளார். இவரது நிறுவனம் ஆடைகள் மற்றும் காலணிகளை இறக்குமதி செய்து விற்று வருகிறது. இதர நிறுவனங்களுக்கும் கடன் அளிக்கிறது.

இந்நிலையில் மகாராஜை சந்தித்த ஆசிஷ் லதா, தனக்கு 6 மில்லியன் ரேண்ட் (ரூ.3.22 கோடி) பணம் தேவைப்படுவதாகக் கூறியுள்ளார். தென்னாபிரிக்காவில் உள்ள பிரபல நெட்கேர் குழும மருத்துவமனைக்கு துணிகள் விநியோகிக்க, இந்தியாவில் இருந்து 3 கன்டெய்னர்களல் இறக்குமதி செய்துள்ளதாகவும், அதற்கு வரி செலுத்தப் பணம் தேவைப்படுவதாக கூறியுள்ளார். இதற்குச் சான்றாகப் போலி ரசீதுகளையும் காட்டியுள்ளார். ஆசிஷ் லதா மகாத்மா காந்தியின் கொள்ளு பேத்தி என்பதால், அவரை நம்பி மகாராஜ் 6 மில்லியன் ரேண்ட் பணம் வழங்கியுள்ளார்.

ஆனால், ஆசிஷ் லதா வாங்கிய பணத்தை திருப்பிச் செலுத்த வில்லை. அவர் கொடுத்த ஆவணங்களும் போலி எனத் தெரிந்தது. இதனால் ஆசிஷ் லதா மீது மகாராஜ் மோசடி புகார் அளித்தார். இந்த வழக்கை விசாரித்த டர்பன் நீதிமன்றம் ஆசிஷ் லதாவுக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. அவர் தற்போது 50,000 ரேண்ட் பிணைத் தொகை செலுத்தி ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

மகாத்மா காந்தியின் வாரிசுகள் பலர் மனித உரிமை ஆர்வலர்களாக பணியாற்றுகின்றனர். அவர்களில் ஆசிஷ் லதா ராம்கோபின்னும் ஒருவர். இவர் தாய் எலா காந்தி தென்னாபிரிக்காவில் பிரபலமானவர். இவரது பணிகளைப் பாராட்டி இந்தியா மற்றும் தென் ஆபிரிக்கா அரசுகள் விருதுகள் வழங்கியுள்ளன.

# மின்னுயர்த்தியில் சிக்கி இளைஞன் மரணம்

மொரட்டுவை நடு (மெத) வீதியில் உள்ள ஒரு ஹோட்டலில் பணிபுரிந்து வந்த இளைஞன், ஹோட்டலில் உள் வேலைக்குப் பயன்படுத்தப்படும் மின்னுயர்த்தியில் (லிஃப்டில்) சிக்கி உயிரிழந்துள்ளார் என மொரட்டுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் ரவிந்து பீரிஸ் (19 வயது) என்ற இளைஞர் ஆவார், அவர் பாணந்துறை, அருக்கொடவைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த நாளில் நான்கு மாடி ஹோட்டலின் மேல் தளத்திற்கு கோப்பைகள் மற்றும் தட்டுகளை எடுத்துச் சென்றபோது லிஃப்ட் அவர் மீது சரிந்து விழுந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# "முஹம்மத்திடமிருந்து நிறைய கற்க வேண்டும்"

நமது நாடு பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள இத்தருணத்தில், நாட்டிற்கு அபிவிருத்தியும் சேவைகளும் இன்றியமையாதவைகளாக காணப்படுகின்றன. பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் தேவை. இந்தப் பிரச்சினைகளை நடைமுறைச் செயல்பாடுகள் மூலம் தீர்க்க முடியும். எம்.எச். முஹம்மத் எப்போதும் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கினார். கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை அடிப்படை உரிமைகளாகவும் மனித உரிமைகளாகவும் கருதி அவற்றைக் கட்டியெழுப்புவதில் சேவையாற்றினார் என்றார்.

முன்னாள் சபாநாகயகர் எம்.எச். முஹம்மத் அவர்களின் 104ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, மறைந்த ரணசிங்க பிரேமதாசவும், எம். எச். முஹம்மதுவும் அரசியல் சமகாலத்தவர்களாக இருந்து நாட்டின் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையாகப் பக்க பலத்தை வழங்கினர். மேயராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், சபாநாயகராகவும் பொரளைப் பகுதியை மையமாகக் கொண்டு மகத்தான சேவைகளை எம். எச்.முஹம்மது ஆற்றியுள்ளார்.

அவரது குணாதிசயங்களைப் பார்க்கும்போது, அவர் மக்களோடு மிகவும் சமீபமாக நடந்து கொண்ட ஒருவராவார். அவர் பொதுமக்களின் குறைகளையும், பொதுமக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார். மக்களோடு மக்களாகக் கலந்து அடிமட்ட மக்களை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒருவராகத் திகழ்ந்தார். அவர் எந்தப் பதவியை வகித்தாலும், மக்களின் குரலை அவர் மறந்து நடக்கவில்லை. வழங்கப்பட்ட வாய்ப்புகளை வீணடிக்காது நடந்து கொண்டார். மக்களின் விருப்பங்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட்டார்.

அவர் நேரடியான முடிவுகளை எடுத்த மக்கள் தலைவராகவும் திகழ்ந்தார். அவர் எல்லா நேரங்களிலும் சாதாரண மக்களுடனே இருந்தார். தாம் பெற்ற பட்டம் பதவிகளை அடிப்படையாகக் கொண்டு அவர் ஒருபோதும் செயல்படவில்லை. இனக்குழுக்கள், மதங்கள் மற்றும் மக்கள் பிரிவுகளுக்கு இடையே பல்வேறு பிளவுகள், பிரிவினைகள் மற்றும் தேவையற்ற மோதல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில், தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அமைதியை மேம்படுத்த முயற்சிகளை முன்னெடுத்த உதாரண புருஷராகத் திகழ்ந்தார்.

60களின் பிற்பகுதியில் தொடர் மாடிக் குடியிருப்பு என்ற எண்ணகருக்குவிற்கு அவர் பெரும் ஆதரவை வழங்கினார். மாளிகாவத்தையில் ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வீடமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக மாற்றுவதில் அவர் பெரும் பங்காற்றினார். காம் உதாவ வேலைத்திட்டத்தை மேம்படுத்த புதிய பல யோசனைகளையும் பரிந்துரைகளையும் கூட முன்வைத்து தனது ஒத்துழைப்பை நல்கினார்.

ஒரு நாட்டின் குடிமக்களாக வாழும் உரிமையை இழந்த பாலஸ்தீன மக்கள் சார்பாக உரத்துக் குரல் எழுப்பினார். அந்தப் பயணத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்த ரணசிங்க பிரேமதாசவுக்கு அவர் பெரும் ஒத்துழைப்பை வழங்கினார். ஐ.நா.வின் தீர்மானங்கள் 242 மற்றும் 338இன் பிரகாரம், இரு நாடுகளும் அமைதியாகச் செயல்பட வேண்டும். இந்த தீர்மானத்தில் ரணசிங்க பிரேமதாச நேரடியாக நின்று குரல் கொடுத்த சந்தர்ப்பத்தில் எம்.எச். முஹம்மது அவர்களும் அவருடன் கைகோர்த்துச் செயற்பட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

# நாயால், பெண்ணுக்கு அபதாரம் செலுத்திய விசித்திரம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரில் பக்கத்து வீட்டுக்காரரின் நாய் கடித்ததில் காயமடைந்த பெண் ஒருவர் தனக்கு ஏற்பட்ட நட்டஈட்டை நாயின் உரிமையாளர் வழங்கவேண்டும் என பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, நாயின் உரிமையாளர் அந்த பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபாவை செலுத்திய விசித்திரமான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றுள்ளது.

ஓய்வு நிலை கல்வி ஆசிரியர் ஆலோசகர் வீட்டில் மூன்று நாய்கள் வளர்த்து வருகின்ற நிலையில் பக்கத்து வீட்டில் வசித்துவரும் ஓய்வு பெற்ற முன்னாள் கல்வி அதிகாரியின் உறவினர்களை நாய் அடிக்கடி கடிக்கச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது இதனால் பக்கத்து வீட்டாருடன் முரண்பாடு ஏற்பட்டு வந்துள்ளது.

சம்பவதினடான சனிக்கிழமை (14) நாயின் உரிமையாளர் நாய்களைத் திறந்து விட்ட நிலையில், பக்கத்து வீட்டின் பெண் ஒருவருக்கு நாய் கடித்துள்ளது. இதனால், அப்பெண் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து நாயின் உரிமையாளருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில், நாயிடம் கடி வாங்கிய பெண் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து நாயின் உரிமையாளரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு இரு சாராரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண் நாய் கடித்ததற்குத் தடுப்பு ஊசி போடவேண்டும் என தனக்கு நட்டஈடாக 40 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என கோரினார். இந்த விசாரணையைத் தொடர்ந்து நாய் உரிமையாளர் பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபாவை வழங்க இணக்கப்பாட்டுக்கு வந்ததையடுத்து குறித்த முறைப்பாட்டை பொலிஸார் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

# ஏவுகணைத் தாக்குதலில் இலங்கைப் பெண்கள் இருவர் காயம்

டெல் அவிவ், ஹைஃபா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட இஸ்ரேல் முழுவதும் பல இடங்களில் ஈரானிய ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் இரண்டு இலங்கைப் பெண்கள் காயமடைந்தனர்.

டெல் அவிவ் நகருக்கு தெற்கே உள்ள ஒரு வீட்டில் பணிபுரிந்த ஒரு பெண், அதிகாலை 03.30 மணியளவில் வீட்டை ஒரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் உலுக்கியதை அடுத்து, தனது குடும்பத்தினருடன் வெளியேற்றப்பட்டார்.

பேட் யாமில் அதிகாலை 04:00 மணியளவில் நடந்த ஒரு தனி சம்பவத்தில், மற்றொரு இலங்கைப் பெண்ணின் வலது கையில் கண்ணாடி விழுந்ததால் காயங்கள் ஏற்பட்டன. அவரது உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார, காயமடைந்த நபருடன் நேரில் பேசியதாகக் கூறினார்.

ஏவுகணைத் தாக்குதல்கள் பரவலான சேதத்தை ஏற்படுத்தின, பல கட்டிடங்கள் தீப்பிடித்தன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு மரணம் மற்றும் பல காயங்களை இஸ்ரேலிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. மேலும், நாட்டில் உள்ள அனைத்து இலங்கையர்களும் உடனடியாக தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.



## “அதிகாரத்துக்கான கூட்டு

# சாக்கடை அரசியலாகும்”

“தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கப்பட்ட - துரோகியென முத்திரைக்குத்தப்பட்ட தரப்புடன், அதிகாரத்துக்காகக் கூட்டுச் சேர்வது சாக்கடை அரசியலாகும். அப்படியான அரசியலை முன்னெடுக்கும் தரப்பின் முகத்திரை தற்போது கிழிந்துவிட்டது” என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.



யாழ். சாவகச்சேரியில் சனிக்கிழமை (14) அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

“நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றது. வடக்கிலும் இதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. தெற்கில் கடைப்பிடித்த அணுகுமுறையை இது விடயத்தில் நாம் வடகிழக்கில் கடைப்பிடிக்கவில்லை. இங்கு நடுநிலை வகித்தோம்.

நாம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருந்தால் இங்குள்ள தமிழ்க் கட்சிகளின் கனவு சிதைக்கப்படும். மனக்கோட்டை, மண்கோட்டையாக மாறிவிடும் என்பதைச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். இங்கு யார் ஆட்சி செய்தாலும் அந்த ஆட்சிக்கு நாம் உதவியாக இருப்போம். ஏனெனில், மக்களுக்குச் சேவை செய்வதே எமது முதன்மை நோக்கமாகும். உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்களுக்கு கிடைக்கப்பெறும் சேவைகள் சரியாகச் சென்றடைய வேண்டும். அதற்காக எமது உறுப்பினர்கள் தீவிரமாகச் செயற்படுவார்கள்.

அதேபோல ஊழல், மோசடிகள் இடம் பெறும் பட்சத்தில் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கும் எமது உறுப்பினர்கள் செயற்படுவார்கள். மக்களை ஏமாற்றும் அரசியலை நாம் முன்னெடுக்கவில்லை. சாக்கடை அரசியல் செய்யவும் தயாரில்லை. அவ்வாறு செய்ய நினைத்திருந்தால் யாழ். மாநகரில் இன்று வேறொரு நபரே மேயராக வந்திருக்கக்கூடும்.

கடந்த காலங்கள் முழுவதும் தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்ட - துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட - ராஜபக்சக்களின் காலை நக்கி பிழைக்கின்றவர் எனக் கூறப்பட்ட - மக்களுக்கு எதிராக அராகங்களைக் கட்டவிழ்த்து விட்டவர் - ஊடகவியலாளர்களைக் கொன்றவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டுச் சேரும் நிலைமை காணப்படுகின்றது. இதனை மக்களும் இன்று புரிந்துகொண்டுள்ளனர்.

மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அல்ல, தமது காவாலித்தனமான அரசியலை தக்கவைத்துக்கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு ஆட்சியமைக்கின்றனர்.

இப்படியானவர்கள் தான் தேசிய மக்கள் சக்தியை இனவாதமாகக் கட்சியெனவும், வாக்களிக்க வேண்டாம் எனவும் பிரச்சாரம் செய்தனர். ஆனால், அவர்கள் யார் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

அதேபோல, தெற்கிலும் கூட்டுக்களவாணிகள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கின்றனர். கடந்த காலங்களில் ஒருவரையொருவர் எப்படி விமர்சித்துக்கொண்டனர். ஆனால், வெட்கம் இல்லாமல் - அதிகாரத்துக்காக - கொள்கை துறந்து கூட்டுச் சேர்கின்றனர்” என்றார்.

# மடியில் குதித்த சிறுமியால் ஒருவர் மரணம்



காரை செலுத்தி வந்த பெண்ணின் மடியில் அவரது இரண்டு வயது மகள் குதித்ததில், கார் கட்டுப்பாட்டை இழந்து, பாதசாரி ஒருவர், முச்சக்கர வண்டி மற்றும் சிறிய லொறி மீது மோதியுள்ளதுடன் இதில் பாதசாரி உயிரிழந்து, மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரை செலுத்தி வந்த பெண் தனது மகளுடன் தேவாலயத்திற்குச் சென்று, பின்னர் அவரை பின் இருக்கையில் அமரவைத்து களுத்துறையில் இருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்துள்ளார்.

பின் இருக்கையில் இருந்து சிறுமி, வாதுவ, தல்பிட்டி பகுதியில் வைத்து ஓட்டுநர் இருக்கைக்குக் குதித்ததாகவும், இதன்போது கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளானது. விபத்தில் பலத்த காயமடைந்த நபர் பாணந்துறை வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தீப்பிடித்து எரிந்த முச்சக்கரவண்டி

பாலித்த ஆரியவங்ச



பசறை 10ஆம் மைல்கள் பிரதேசத்தில் முச்சக்கர வண்டியொன்று தீப்பிடித்து எரிந்த சம்பவம் சனிக்கிழமை (14) இடம்பெற்றுள்ளது.

ஓட்டுநர் முச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிய நிலையில், இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்தில் இருந்த இளைஞர்கள் தீயை அணைத்துள்ளனர்.

முச்சக்கர வண்டியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக தீப்பிடித்து எரிந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# பேஸ்புக் விருந்து; 26 பேர் கைது



பாணந்துறை, மஹபெல்லான பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றில் , பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட போதைப்பொருள் விருந்தை முற்றுகையிட்ட போது தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேர் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அலுபோமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 16 கிலோகிராம் கஞ்சா மற்றும் ஹேஷ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் அனைவரும் அதிக அளவில் போதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹபெல்லன, தோட்டுபொல வீதியில் உள்ள விடுதியொன்றுக்கு வந்த குழு கூச்சலிடுவது மற்றும் அவர்களின் உரத்த இசை தொந்தரவாக இருப்பதாக கூறி, 119 பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவிற்கு ஞாயிற்றுக்கிழமை(15) அதிகாலை 1.30 மணியளவில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கேரள கஞ்சாவுடன்

# ஒருவர் கைது; ஐவர் தப்பியோட்டம்

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - பொன்னாலை காட்டு பகுதியில் சனிக்கிழமை (14) அன்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பெருமளவான கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஐவர் தப்பிச் சென்றுள்ளனர். அத்துடன் துவிச்சக்கர வண்டிகள் ஐந்து மீட்கப்பட்டுள்ளன.

மாதகல் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய நபரே இவ்வாறு 293 கிலோ 497 கிராம் எடையுடைய கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் வழிகாட்டலின் கீழ், யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட



சந்தேக நபர் தற்போது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் விசாரணைகளின் பின்னர் அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

# வீட்டின் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு

கொஹுவல, களுபோவில, டெம்பிள் வீதியில் ஞாயிற்றுக்கிழமை (15) அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள், ஒரு வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, பின்னர் தப்பிச் சென்றுள்ளனர். சந்தேக நபர்கள் வீட்டின் வாயில் மற்றும் முன்பக்கத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், யாருக்கும் காயமோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்படவில்லை.

ஆரம்பகட்ட விசாரணைகளில், இந்த சம்பவம் நிதி தகராறுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

கல்கிஸ்ஸை குற்றப் புலனாய்வுப் பணியகம் மற்றும் கொஹுவல பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முகத்துவாரத்தில் ஆயுதம் தேடல்

அபு அலா



திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றின் காணியொன்றில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி பெக்கோ இயந்திரம் மூலம் அகழ்வுப்பணி மூதூர் நீதவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் சனிக்கிழமை(14) காலை முன்னெடுக்கப்பட்டது.

ஈச்சிலம்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மூதூர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில் அகழ்வு இடம்பெற்ற இடத்திலிருந்து எந்தவித தடைய பொருட்களும் மீட்கப்படவில்லை.

இதையடுத்து மூதூர் நீதிமன்ற நீதிபதி அகழ்வினை இடைநிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவு வழங்கியதையடுத்து சுமார் ஒரு மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டது.

குறித்த இடத்திற்கு விசேட அதிரடிப்படையினர், தடையில் பிரிவு பொலிஸார், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வங்கி அதிகாரி சடலமாக மீட்பு

சுமனசிறி குணதிலக

கொழும்பில் உள்ள தனியார் வங்கியொன்றில் பணிபுரிந்து வரும், மொனராகலை, பிபில, மலபடு ஹெல பகுதியைச் சேர்ந்த லஹிரு சமன் குமார (28 வயது), காணாமல் போயிருந்த நிலையில், பாழடைந்த வீடொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனமல்வில பகுதியில் உள்ள, மனைவிக்குச் சொந்தமான வீட்டில் வசித்து வந்துள்ளதுடன், பதுளையில் உள்ள தனது தாய் வீட்டிற்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

அவர் வராததால், தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் அதற்கமைய அவரது சொந்த ஊரான பிபில, யல்குபுர, பிரதேசத்தில், மூடப்பட்டிருக்கும் பாழடைந்த வீடொன்றை பொலிஸார் மற்றும் அயலவர்கள் இணைந்து தேடிய போது காணாமல் போனவரின் உடல் கூரையில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து பிபில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜனாதிபதி மன்னிப்பு பெறாத கைதிகளை விடுவித்த செயல்

கைதிகள் குழுவிற்கு சமீபத்திய வெசாக் பண்டிகையின்போது வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பு நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தில், ஜனாதிபதி மன்னிப்பு பெறாத கைதிகள் குழுவும் முன்னறிவிப்பின்றி விடுவிக்கப்பட்டனர்,

வருடத்திற்குப் பலமுறை ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் சில அரசாங்கம் கைதிகளை விடுவிக்கிறது. இதற்காக, அந்தக் கைதிகள் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களின் நடத்தை நன்றாக இருக்க வேண்டும். அவர்கள் பாலியல் பலாத்காரம் அல்லது சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது போதைப்பொருள் வழக்குகள் அல்லது பயங்கரவாத வழக்குகளில் தண்டனை பெற்றிருக்கக்கூடாது. அவர்கள் நீண்ட சிறைத்தண்டனை அனுபவித்திருக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளில் எதையும் பூர்த்தி செய்யாத ஒருவருக்கு முந்தைய வெசாக் நாளில் ஜனாதிபதி மன்னிப்பு கிடைத்தது. அவர் நிதி மோசடிக்காகச் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு நிதி நிறுவன நிர்வாகி. அவர் மிகக் குறுகிய காலம் சிறையிலிருந்தார்.

ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் மன்னிப்பு பெறாதவர்கள் இதற்கு முன்பும் விடுவிக்கப்பட்டனர் என்பது இந்த விவகாரத்துக்குப் பின்பு தெரியவந்தது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் வெளியே வர மூன்று முதல் நான்கு மில்லியன் ரூபாய் கூட செலவிடத் தயாராக இருக்கிறார். சிறையில் இதுபோன்ற பணக்காரர்கள் பலர் உள்ளனர்.

ஒவ்வொரு சிறையிலிருந்தும் நபர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட பிறகு, அந்த நபர்கள் குறித்து அமைச்சு தனித்தனி அறிக்கைகளைச் சேகரித்து தடயவியல் தணிக்கையை நடத்துகிறது.

பின்னர் சிறைச்சாலையால் அனுப்பப்படும் பட்டியலிலிருந்து எந்த கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட கைதிகளின் பெயர்களின் பட்டியல் சிறைச்சாலை ஆணையருக்குத் திருப்பி அனுப்பப்படும். சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மூலம் இது செய்யப்படுகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டால் அனாதைகளாகிவிடுவார்கள் என்பதால், சிறையில் இருக்க விரும்பும் மாற்றுத்திறனாளி கைதிகளும் உள்ளனர். தந்திரமான சிறை அதிகாரிகள் செய்வது என்னவென்றால், அத்தகைய கைதிகளைத் தேடி, அவர்களுக்குப் பதிலாக ஜனாதிபதி மன்னிப்பு பெறாத ஊழல்வாதிகளை விடுவிப்பதாகும். இதற்கு வசூலிக்கப்படும் கட்டணம் எங்களுக்குத் தெரியாது.

இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் சிறைச்சாலைகள் ஊழல் நிறைந்தவை. டொனால்ட் டிரம்ப் இந்த முறை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவுடன் தனது ஆதரவாளர்கள் 1500 பேரைச் சிறைகளிலிருந்து விடுவித்தார். டொனால்ட் டிரம்ப் தோல்வியடைந்தபோது அவர்கள் அனைவரும் அவருக்காக வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். இலங்கையின் ஆட்சியாளர்கள் அவ்வளவு ஊழல் நிறைந்தவர்கள் அல்ல என்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

எனினும், ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப்படாமல், மன்னிப்பு பெறாத கைதிகள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தி, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். விடுவிக்கப்பட்ட கைதிகளை மீளவும் கைது செய்து, தண்டனையை அனுபவிக்க வழிசமைக்க வேண்டும். முறைகேடுகளில் ஈடுபட்ட அதிகாரிகளின் சொத்துக்கள் முடக்கப்பட்டு அரசுடமையாக்கப்படவேண்டும். வழங்கும் தண்டனை அடுத்தடுத்த அதிகாரிகளுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# மனித உரிமை ஆணையர் விஜயத்தின் மீதான எதிர்பார்ப்பு

லக்ஸ்மன்

வரலாற்றுக் காலந்தொட்டே வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கெதிராக இடம்பெற்றுவரும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைத் தடுக்க முடியாமல் இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இன்றுவரை தோற்றுப் போயே இருக்கின்றன. இதில் நேரடியாக அரசுக்கும் பங்கிருப்பதும் இதற்குக் காரணம்.

மாறாக இலங்கையில் ஆயுதப் போராட்டம் நிறைவுற்று 15 வருடங்கள் கடந்த நிலையிலும், வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் ஓர் நிழல் யுத்தத்தினை எதிர்கொண்டே வாழ இந்த அரசுகளால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். என்பது மனித உரிமை அமைப்புகள், சிவில் அமைப்புகள், செயற்பாட்டாளர்களின் வெளிப்படுத்தலாக இருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் இலங்கை அரச பொறிமுறையானது தமிழ் மக்கள் சுதந்திரமாகச் செயற்படமுடியாவண்ணம் நடவடிக்கைகளை முன் நகர்த்துகிறது. தமிழ் மக்களின் நிலங்கள், குடியிருப்பு மற்றும் வாழ்வாதார நிலங்கள் தவறான முறையில் சுவீகரிக்கப்படுகின்றன. அதற்கான அண்மைய முயற்சியாகக் கடந்த மாதம் வெளியிடப்பட்டு வாபஸ் பெறப்பட்ட காணி உரிமை கோரல் வர்த்தமானியைக் குறிப்பிடமுடியும். அதே நேரத்தில், வடக்கு கிழக்கு மக்களின் அடையாளங்களை அழிக்கும் செயற்பாடுகளையும் பெரும்பான்மை சமூகமும் அரசாங்கமும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

ஆட்சிகள் மாறினாலும் அரசாங்கத்தினதும் அதன் கட்டமைப்புகளினதும் செயற்பாடுகளில் மாத்திரம் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்பட்டதாக அடையாளம் காணாத இலங்கையில் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு எப்போது கிடைக்கும் என்பது தெரியாத புதிரே.

மனித உரிமை பாதுகாவலர்கள், செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என பலரும் பாதுகாப்புத் தரப்பினரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும், கண்காணிக்கப்படுவதும் நடைபெற்று வருகிறது. இவ்வாறு இலங்கை அரசின் இராணுவ மற்றும் புலனாய்வுத் துறையினரால் கட்டமைக்கப்பட்ட வகையிலான அச்சுறுத்தல்களுக்கும் நெருக்குதலுக்குள்ளும் இருந்து கொண்டு

காலங்கடத்த வேண்டிய நிலைமையே காணப்படுகிறது. வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கூற

முடியாமலும், போர் குற்றங்கள், இனஅழிப்பு, மனிதப்புதைகுழிகள் மற்றும்

மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பு கூறாமலும் இருந்து கொண்டு அதனை

இராஜதந்திர வகைகளில் தவிர்ப்பதையே இலங்கை அரசு கவனமாக மேற்கொள்கிறது. இதனையே சர்வதேச தரப்புகள் ஏற்று நடக்கின்ற சூழலே காணப்படுகிறது.

இந்த நிலையில்தான், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் துர்க் அடுத்த வாரம், இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். அவரது விஜயம் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்களின் பின்னர், ஒரு முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் நடைபெறுவதாகப் பேசப்படுகிறது. அந்தவகையில்தான் இந்த விஜயத்தில் தமிழ் மக்கள் சார்ந்து நடைபெறவேண்டிய, கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து கவனத்தை ஈர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இலங்கை சுதந்திரம் பெற்று 76 வருடங்களுக்கும் மேலாகத் தமிழ் மக்களிடம் காணப்படுகின்ற எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேறாத நிலையில் ஒரு கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்கள் தங்களின் எதிர்பார்ப்பான சுயநிர்ணய உரிமையானது எப்போது கிடைக்கும் என்பது ஏக்கத்துக்குரியதாகவே மாறிவிட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக இலங்கைத் தமிழ் மக்களின் புரையோடிப்போன இனப் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் யுத்தத்தின்போது, படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையத்தினை எதிர்பார்ப்பதும் நடைபெற்று வருகிறது. இலங்கையில் நடைபெற்ற யுத்தம் முள்ளிவாய்க்காலுடன் புதைந்து போனதாக எல்லோரும் எண்ணிக் கொண்டாலும், அந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வு நடைபெற்று 15 வருடங்கள் கடந்தும் தமிழர்களுக்கான நீதி இதுவரை எட்டாக்கனியாகவே

இருக்கிறது. ஒவ்வொரு வருடத்திலும் மார்ச் மாதத்திலும், செப்ரம்பர் மாதத்திலும் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகளின் போது, நிச்சயமாக இவ்வருடத்தில் நாம் கோரும் நீதி கிடைக்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதும் ஏமாறுவதும் வழமையாகிவிட்டது. இதில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுவிடுமா என்பது அவர்களின் கனவானதாக இருக்கிறது.

இந்த நிலையில், இலங்கைக்கு விஜயம் செய்கின்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் துர்க் தனது விஜயத்தின் போது இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான செயற்பாடுகள் குறித்தும் மனித உரிமைகளை மீறுகின்ற செயற்பாடுகள் தொடர்பாகவும் எவ்வாறான கவனித்தலை மேற்கொள்வார் என்பது யாராலும் அறிந்து கொள்ள முடியாததே. இருந்தாலும், இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் உடலங்கள் புதைக்கப்பட்டுள்ள செம்மணி உள்ளிட்ட மனித புதைகுழிகளைப் பார்வையிட வேண்டும்.

இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள 21இற்கும் மேற்பட்ட மனித புதைகுழி அகழ்வின் போது, சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழு அழைக்கப்பட்டுக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம் பெற வேண்டுமென இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். இலங்கையில் உள்ள மனித புதை குழிகள் தொடர்பாகவும், இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாகவும் இலங்கை அரசைப் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளுக்காக சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்றும் நீண்ட கோரிக்கை இருக்கிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையும் நீதியினையும் வழங்கக் கூடிய சர்வதேச பொறிமுறை ஊடான விசாரணையினை மேற்கொள்ள உதவுதல். இறுதி யுத்தம் இடம்பெற்ற முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க வேண்டும். வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள சிவில் அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து கள நிலைவரங்களை அறிந்து கொள்ள வேண்டும் போன்ற கோரிக்கைகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு முன்னால் இருக்கின்றன.

இலங்கை அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கைக்கான பொறுப்புக் கூறல் திட்டக் குழுவினர் இலங்கைக்குள் வருகை தருவதற்கும் அவர்களின் சுதந்திரமான செயற்பாட்டிற்கும் இதுவரை அனுமதி

வழங்கவில்லை. இருந்தாலும், மனித உரிமை பேரவை அங்கத்துவ நாடுகள் அதுதொடர்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்கவுமில்லை. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும், அதனைப் பூரணப்படுத்துவதற்கான போதாமையுடனேயே காலம் நிறைவடையவுள்ள திட்டத்திற்குக் கால நீடிப்பு தேவையாக இருக்கிறது.

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட 40இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர் தொடர்பான நீதிக்கான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டவைகளாகவே இருக்கின்றன. அரசியல் நலன்களுக்காக, கண்துடைப்புக்காக அவை கையிலெடுக்கப்பட்டாலும் பயன் எதுவும் நடைபெறுவதேயில்லை. புதிய அரசாங்கமும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

இணைபிரியா வடக்கு - கிழக்குத் தாயகம் என்ற தமிழ் மக்களின் நிலைப்பாடு காணாமல் போய் நீண்டகாலமாகிவிட்ட ஒரு நாடு, ஓர் அரசு, ஒரு சட்டம் என்றமைகின்ற இலங்கையில் தமிழர்களுடைய சுயநிர்ணயக் கோரிக்கைகள் காணாமல் ஆக்கப்படும் என்பது நிச்சயமாகிவிட்ட நிலையில், தமிழர்களுடைய இனப் பிரச்சினை குறித்த விடயம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையினால் எந்த அளவுக்குச் சாத்தியப்படும்.

இனக் கலவரங்களையும், இனப் பரம்பல் மாற்றங்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்திருந்த இலங்கையின் அரசாங்கங்கள் தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளை மழுங்கடிக்கும் வகையிலேயே செயற்பட்டிருந்தன. இதில் புதிய அரசு மாற்றமுடையதாக இருக்குமா என்றால் அது காத்திருப்புக்கானது. சீடோ சமவாயம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரிக்கைகள் காணப்பட்டாலும் அது இன்னமும் நடைபெறவில்லை. இதற்கான வலியுறுத்தலை மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்குக் கொடுப்பாரா பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் ஆகிய இரண்டையும் முற்றாக நீக்குவதற்கான எந்தவித தோதான நிலைமையும் உருவானதாகத் தெரியவில்லை.

இன அழிப்புச் செயற்திட்டங்களும், பொறுப்புக் கூறல் தட்டிக்கழிக்கப்பட்டு கால இழுத்தடிப்புகளும் பூசி மெழுகல்களும் நடைபெற்று வருகின்ற இலங்கையில், மனித உரிமைகள் ஆணையாளர் 76 வருட தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களில் காத்திரமான நடவடிக்கைகளை அரசு உடன் மேற்கொள்ள வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பாரா பொறுப்புக்கூறலை விடுத்து நீதி வழங்கலுக்கான சூழலை ஏற்படுத்துவாரா அல்லது இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான நிகழ்ச்சிநிரலுக்குள் அகப்பட்டு அந்த அலையில் அடிபட்டு அமைதியாவாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

வெறுமனே அழுத்தம் பிரயோகத்தல் மாத்திரம் எதனையும் அடைந்து தராது என்பதும் கட்டாயப்படுத்தலும் அதனையும் தாண்டிய செயற்பாடுகளே பொருத்தமுடையதாக இருக்கும் என்றாலும் மனித உரிமைகள் ஆணையாளரது இலங்கைக்கான விஜயம் அடுத்த மனித உரிமை அமர்விலேனும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்போம். தொடர்ந்தும் அதனையே செய்வோம். மாற்றமில்லாதது அதுவொன்றே.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களிலிருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நோய்கள் பரவும் அபாயம்

பதுளை நகரின் வடிகால் அமைப்புகளில் தண்ணீர் தேங்கிக் கிடப்பதால், டெங்கு மற்றும் பிற நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

பதுளை பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள வடிகால், பதுளை விசாக்கா வித்தியாலயத்திற்கு முன்பு மாவட்ட டி.ஐ.ஜி அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையத்திற்கிடையில் உள்ள விசாக்கா வீதியில் மற்றும் பதுளை மத்திய வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதியின் கடிகார கோபுரத்திற்கு அருகில் தனியார் வகுப்புகள் நடைபெறும் வளாகத்தில் அருகில் இந்த சுகாதாரக் கேடு அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடிகால் அமைப்புகள் வழியாக நீர் சரியாக வெளியேற்றப்படாமை மற்றும் கழிவுநீர் வடிகால்களில் வெளியேற்றப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தான் சரியாக வடிகால்களை சுத்தம் செய்வதாகவும் நீர் வெளியேற்றப்படாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நகரசபை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பாலித்த ஆரியவங்ச





# இஸ்ரேல் - ஈரான் அமைதியின்மை எம்மில் ஏற்படுத்தும் தாக்கம்



ச.சேகர்

மத்திய கிழக்கில் நீண்ட காலமாக காணப்பட்டு வந்த பதட்ட நிலை, கடந்த வாரத்தின் பிற்பகுதி முதல் மோதலாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையில் வெள்ளிக்கிழமை பரஸ்பர தாக்குதல்கள் நடைபெற்றிருந்தன.

அதன் தாக்கத்தை உடனடியாகவே சர்வதேச சந்தையில் அவதானிக்க முடிந்தது. குறிப்பாக இந்த யுத்தம் நடைபெறும் பகுதி, கப்பல் போக்குவரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அமைந்திருப்பதால், எரிபொருள் விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்படலாம் என்ற பீதி முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் பகுதியில் எழுந்துள்ள அமைதியின்மையின் காரணமாக, சரக்கு கப்பல் காப்புறுதி கட்டுப்பணங்களும் பெருமளவு அதிகரித்துள்ளன. குறிப்பாக, பிரெண்ட் குரூட் எனப்படும் கச்சா எண்ணெய் விலை பெரல் ஒன்றுக்கு 8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து, 75 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. இந்த விலை உயர்வுகள் அனைத்தும், நுகர்வுச் சங்கிலியில் இறுதியாக அமைந்திருக்கும் இறுதி நிலை நுகர்வோரைச் சென்றடையும் என்பதில் விவாதங்களில்லை. ஒரு சில அபிவிருத்தியடைந்த நாடுகள் இந்த விலை உயர்வைத் தாம் பொறுப்பேற்று மக்களுக்கு ஏதேனும் வகையில் நிவாரணங்களை வழங்கிய போதிலும், இலங்கையைப் பொறுத்தமட்டில், அவ்வாறு நிவாரணம் வழங்கக்கூடிய நிலையில் தற்போது அரசாங்கத்தின் நிலை இல்லை என்பதே யதார்த்தம். கடந்த காலங்களில் எவ்விதமான தூர நோக்குமின்றி, இவ்வாறு தான்தோன்றித்தனமான நிவாரணங்களை வழங்கியிருந்த அரசாங்கத்தை மக்களே துரத்தியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


எரிபொருள் என்பது போக்குவரத்து தேவைகளுக்கு மாத்திரமன்றி, பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் செயன்முறையிலும் சேவை வழங்கல்களிலும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதனால், எரிபொருள் விலை அதிகரிப்பு என்பது சகல பொருட்கள் மற்றும் சேவைகள் அதிகரிப்பிலும் தாக்கம் செலுத்தும். உதாரணமாக, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த முறுகல் நிலையினால், நமது உள்நாட்டில் விளையும் மரக்கறிகளின் விலைகள், அல்லது எமது கடல் எல்லையினுள் பிடிக்கப்படும் மீன்களின் விலைகளில் கூட விலை அதிகரிப்பு ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும்.

ஈரானின் எரிபொருள் மற்றும் எரிவாயு உற்பத்தி நாளொன்றுக்கு 3.3 பில்லியன் பெரல்களாக அமைந்துள்ளது. கச்சா எண்ணெய் நாளொன்றின் ஏற்றுமதி 1.8 பில்லியன் பெரல்களாக காணப்படுவதுடன், சீனாவின் தனியார் எண்ணெய் சுத்திகரிப்பாளர்கள் ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய்யைக் கொள்வனவு செய்கின்றனர். உலகின் மூன்றாவது மாபெரும் எரிபொருள் உற்பத்தியாளராக ஈரான் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. எரிவாயு உற்பத்தியைப் பொறுத்தமட்டில், உலகின் எரிவாயு தேவையில் 7 சதவீதத்தை ஈரான் உற்பத்தி செய்கின்றது. இந்த நிலைகளை இலக்கு வைத்து இஸ்ரேல் வார இறுதியில் தாக்குதல்களை நடத்தி, சேதங்களை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் உலகின் மாபெரும் எரிவாயு உற்பத்திப் பகுதியின் செயற்பாடுகள் பகுதியில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஈரான் வார இறுதியில் அறிவித்திருந்தது.

ஏற்கெனவே ஈரானிடமிருந்து நேரடியாக எரிபொருள் மற்றும் எரிவாயு கொள்வனவுக்கு அமெரிக்கா தடைவிதித்திருந்த நிலையில், ஈரான் தமது வர்த்தக நடவடிக்கைகளை கப்பல்-கப்பல் மற்றும் செய்மதிகளிலிருந்து மறைத்து விநியோகிக்கும் முறைகளில் விநியோகித்திருந்தது. தற்போது இஸ்ரேல்-ஈரான் முறுகல் முற்றியுள்ள நிலையில், இந்த விநியோகம் தடைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஈஸ்ரேலின் தாக்குதலில் சேதமடைந்துள்ள ஈரானின் எரிவாயு உற்பத்தி பகுதி





சர்வதேச நாணய நிதிய வியாக்கியானத்தின் அடிப்படையில், சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை 10சதவீதம் அதிகரிக்கும் போது அபிவிருத்தியடைந்த நாடுகளின் பணவீக்கம் 0.4 சதவீதப் புள்ளிகளால் அதிகரிக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விலைகள் ஒரு பக்கமிருக்க, தற்போது முறுகல் நிலை தோன்றியுள்ள பகுதி, சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அமைந்துள்ளது. செங்கடல் முதல் சுயெஸ் கால்வாய் வரையில் சர்வதேச கப்பல் போக்குவரத்து நடைபெறும் முக்கிய பகுதியில் ஈரானின் பின்புலத்தில் இயங்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் இந்தப் பகுதியினூடாக பயணிக்கும் கப்பல்களின் மீது தாக்குதல்களை மேற்கொள்வதாக சர்வதேச செய்திச் சேவைகள் தெரிவித்துள்ளன. இதனால் ஆசியா மற்றும் ஐரோப்பா இடையே பயணிக்கும் பல சரக்குக் கப்பல்கள் ஆபிரிக்காவைச் சுற்றிப் பயணிக்க வேண்டிய நிலை எழுந்துள்ளது. இதனால் பயணத்துக்கான காலம் மேலதிகமாக ஓரிரு வாரங்கள் நீடிக்கப்படுவதுடன், இந்தப் பயணத்துக்கான கட்டணங்களும் 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை மேலதிகமாக அமைந்திருப்பதாகச் சர்வதேச பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அத்துடன், பாரசீக குடா மற்றும் அரபுக் கடலை இணைக்கும் ஹோர்மூஸ் நீரிணையைப் போக்குவரத்துக்குத் தடை செய்யப் போவதாக ஈரான் தொடர்ந்தும் எச்சரித்து வருகிறது. இந்த நீரிணையினூடாக உலகின் எரிபொருள் வர்த்தகத்தின் நான்கில் ஒரு பகுதி பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நீரிணை போக்குவரத்துக்குத் தடைப்படுமாயின், பெரல் கச்சா எண்ணெய் விலை 100 அமெரிக்க டொலர்கள் வரை உயரக்கூடும் என கோல்ட்மன் சாக்ஸ் எதிர்வுகூரியுள்ளது. கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற பிரதான எரிபொருள் உற்பத்தி நாடுகள் இந்த நீரிணையில் அதிகம் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விமான போக்குவரத்தைப் பொறுத்தமட்டில், நெருக்கடி நிலை எழுந்துள்ள இஸ்ரேல், ஈரான், ஜோர்தான், சிரியா, லெபனான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளின் வான் பரப்புகளைத் தவிர்த்து, மாற்று வழிகளினூடாக விமானச் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அடங்கலாக, பல சர்வதேச விமானச் சேவைகள் அறிவித்துள்ளன. விமானச் சேவைகள் முன்னெடுக்கப்படுவதைக் காண்பிக்கும் ரேடார் படங்களிலும், மேற்படி நாடுகளின் வான் பரப்புகளில் எவ்விதமான பயணிகள் அல்லது சரக்கு விமானச் சேவைகள் இடம்பெறாமையை காண்பிக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்த பின், அதிலிருந்து படிப்படியாக மீண்ட வண்ணமிருக்கும் இலங்கைக்கு இந்த மத்திய கிழக்கு நெருக்கடி பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக, அதிகரிக்கும் எரிபொருள் செலவுகள் காரணமாக, தற்போது வருடாந்தம் எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடும் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகையை விட மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிட வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் பிரதானமாக ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் பெரும்பாலும் அனைத்துமே அத்தியாவசிய தேவையை நிவர்த்தி செய்யாதவையாக அமைந்துள்ளன. அதாவது ஆடை, தேயிலை போன்றன. இதனால், சர்வதேச சந்தையில் அவற்றுக்கான நுகர்வு குறைவடையும் போது, அவற்றினூடாக கிடைக்கும் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படும்.

அதுபோன்று, இலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெருமளவு தங்கியுள்ளது. சர்வதேச யுத்தம் போன்ற புறக் காரணிகளால் சுற்றுலாப் பயணிகளின் பிரயாணங்கள் பெருமளவில் குறையும். நாம் கூட, எமது வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது, வருடத்தில் மூன்று முறை சுற்றுலா செல்பவர்களாக இருந்தால் அதனை இரண்டு அல்லது ஒன்றாகக் குறைத்துக் கொள்வது பற்றிச் சிந்திப்பது யதார்த்தம். இது சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கும் பொருந்தும்.

மத்திய கிழக்கில் பணியாற்றும் இலங்கையர்கள் இலங்கைக்கு அனுப்பும் வெளிநாட்டுப் பண அனுப்புகைகளிலும் சரிவு ஏற்படும். அவர்கள் பணிபுரியும் நாட்டில் அவர்களின் ஜீவனோபாய செலவுகள் அதிகரிப்பதால், அவர்கள் இலங்கைக்கு அனுப்பும் தொகை குறைவடையலாம்.

மூலப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போது உயரும் உற்பத்திப் பொருட்களின் விலை, அதே மூலப்பொருட்களின் விலைகள் குறையும் போது வீழ்ச்சியடையும் ஒரு கலாசாரம் இலங்கையில் காணக்கிடைப்பதில்லை. உதாரணமாக எரிபொருள் விலைகள் அதிகரிக்கும் போது உயரும் போக்குவரத்துக் கட்டணங்கள், அவை குறையும் போது குறைவதில்லை. மின்சாரக் கட்டணம் உயரும் போது அதிகரிக்கும் குளிர்சாதனப் பெட்டியிலுள்ள நுகர்வுப் பொருட்கள், மின் கட்டணம் குறையும் போது குறைவதில்லை. இவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது கண்காணிப்பதற்கு எந்த பொது அமைப்புகளும் முன்வருவதுமில்லை. ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ‘மாஃபியாக்கள்’ என பெயர்சூட்டி அவற்றை பொது வெளியில் பேசி பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்வதைத் தவிர, இவற்றைக் கண்காணித்து, கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பார் யாரும் இல்லை.

பாகிஸ்தான் இந்தியா இடையே கடந்த மாதம் ஒரு போர் சூழும் நிலை எழுந்த போது, அமெரிக்கா தலையிட்டு அந்த நிலை மேலும் மோசமடையாமல் இருக்க நடவடிக்கை எடுத்திருந்தாலும், ஈரான் மற்றும் இஸேரல் இடையில் எழுந்துள்ள இந்த நெருக்கடியான நிலையைத் தணிப்பதில் அமெரிக்கா பெருமளவு ஈடுபாட்டைக் காண்பிக்காது என்பது போலவே ஆரம்ப நகர்வுகள் சமிக்ஞைகள் தெரிவிக்கின்றன.

எது எப்படியாயினும், சர்வதேச மட்டத்தில் அத்தியாவசிய நுகர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏதேனும் உற்பத்தியில் இலங்கை தன்னை இனியாவது ஈடுபடுத்த வேண்டியது முக்கியமாகும். அதனூடாக, எதிர்காலத்தில் எழக்கூடிய இது போன்ற எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட சூழல்களால் எழும் பொருளாதார பாதிப்புகளிலிருந்து ஓரளவேனும் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.





சயந்தினி ஆனந்தராசா,
உளவளத்துணை மாணவி,
தேசிய சமூக அபிவிருத்தி,
நிறுவனம்.

## இதயத்தின் எதிரொலி:
# சமூகத்தின் உளவியல் முகம்

நாம் தனித்ததீவுகள் அல்ல ஒருவரோடொருவர் பின்னிப் பிணைந்திருக்கும் உணர்வுப் பெருங்கடல். ஒவ்வொரு இதயத் துடிப்பும் மற்ற இதயங்களில் எதிரொலிக்கிறது. சமூகத்தின் உளவியல்முகம், இந்த ஆழமான தொடர்புகளையும் அதனால் உருவாகும் அழுத்தங்களையும், ஏக்கங்களையும் கூர்மையாகப் பார்க்கிறது.

புறக்கணிக்கப்பட்ட ஒரு பார்வையும், கனிவான ஒரு சொல்லும் ஒரு தனி மனிதனின் உலகத்தையே புரட்டிப் போடக்கூடிய சக்தி வாய்ந்தது. இந்த அழுத்தமான உண்மையை நாம் உணரத் தவறினால்,சமூகத்தின் ஆன்மா காயமடையும்.

சமூகத்தின் ஒவ்வோர் அசைவும் ஓர் அழுத்தத்தை உருவாக்குகிறது. எதிர்பார்ப்புகளின் சுமை, அங்கீகாரத்திற்கான ஏக்கம், தனித்துவிடப்படும் பயம் - இவை ஒவ்வொருவரின் மனதிலும் ஒருவித இறுக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, சமூக ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள் மற்றும் புறக்கணிப்புகள் போன்ற கசப்பான யதார்த்தங்கள், பாதிக்கப்படுபவர்களின் மனதை ஒரு கொதிக்கும் நெருப்பாக மாற்றுகின்றன. இந்த அழுத்தங்கள்



வெளிப்படையாக வெடிக்காமலிருக்கலாம், ஆனால் அவை உள்ளுக்குள் அரித்து, ஒருவரின் தன்னம்பிக்கையையும், மன அமைதியையும் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும்.

மற்றவர்களின் பார்வையில் இருந்து நாம் நம்மைப் பார்க்கும் விதம், ஒருபெரிய அழுத்தத்தை உருவாக்குகிறது. சமூக ஊடகங்களில் நாம் காணும் ஒப்பீடுகள், நம்மை நாமே குறைத்து மதிப்பிடும் நிலைக்குத் தள்ளுகின்றன. 'சரியான' உடல்வாகு, 'சரியான' வாழ்க்கை முறை என்ற மாயை, பலரின் மனதை அரித்து, தன்னம்பிக்கையின் வேர்களை வெட்டுகிறது. இந்த அழுத்தத்தின் விளைவாக, மனச்சோர்வு, பதட்டம் மற்றும் தாழ்வுமனப்பான்மை போன்ற பிரச்சினைகள் பெறுகின்றன.

உறவுகள் ஒருபுறம் ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருந்தாலும்,மறுபுறம் அவை அழுத்தத்தின் பிறப்பிடமாகவும் இருக்கலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது, ஏற்படும் ஏமாற்றம்,தவறான புரிதல்களால் உருவாகும் மனக்கசப்பு,மற்றும் நெருக்கமானவர்களால் ஏற்படும் புறக்கணிப்பு - இவை இதயத்தை பிளக்கும் வலியைத் தருகின்றன.

இந்த அழுத்தங்களை வெளிப்படுத்த முடியாமல் உள்ளுக்குள் புதைத்துவைப்பது, ஒருநாள் வெடித்துச் சிதறும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

சமூகம் என்பது வெறும் தனிநபர்களின் கூட்டுத்தொகை அல்ல அது உணர்வுகளின் ஒரு சிக்கலான வலைப்பின்னல். ஒருவரின் மகிழ்ச்சி மற்றவரின் மகிழ்ச்சியில் எதிரொலிக்கிறது, ஒருவரின் துக்கம் மற்றவரின் இதயத்தையும் கனக்கச் செய்கிறது. ஆனால், இந்த உணர்வுப் பிணைப்பை நாம் சரியாகப் புரிந்துகொள்வதில்லை. மற்றவர்களின் அழுத்தங்களையும், வலிகளையும் நாம் அலட்சியப்படுத்தும் போது,சமூகத்தின் அடித்தளமே ஆட்டம் காணத் தொடங்குகிறது.

சமூகமாற்றத்திற்கான முதல் படி, இந்த அழுத்தங்களை உணர்ந்து கொள்வதுதான். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும்,அவர்களின் கஷ்டங்களைப் புரிந்துகொள்வதும் ஆதரவாக இருப்பதும் ஓர் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் அஸ்திவாரங்கள். நாம் ஒருவரோடொருவர் பேசும்போதுநம் இதயத்தின் எதிரொலியை கேட்க முயற்சி செய்யவேண்டும். மௌனத்தின் பின்னால் ஒளிந்திருக்கும் கூக்குரல்களை உணர வேண்டும்.

இந்த அழுத்தமான உண்மையை நாம் ஏற்றுக்கொண்டால், ஒரு கருணையான, புரிதலான சமூகத்தை உருவாக்க முடியும்.

புறக்கணிப்புக்கு பதிலாக அரவணைப்பும், வெறுப்புக்கு பதிலாக அன்பும், அழுத்தத்திற்கு பதிலாக ஆதரவும் நிறைந்த ஓர் உலகம் சாத்தியமாகும். இதயத்தின் எதிரொலியை நாம் செவிமடுத்தால்,ஒவ்வொரு தனி மனிதனும் மதிப்புடனும், மரியாதையுடனும் நடத்தப்படும் ஒரு சமூகத்தை நாம் கட்டியெழுப்ப முடியும். இது வெறும் கனவல்ல, நாம் அனைவரும் இணைந்து எடுத்தால் நிகழக்கூடிய ஒரு புரட்சி.

# லிப்டன் பெயரை உலகிற்கு கொண்டு சென்ற தம்பதென்ன தேயிலைத் தோட்டத்தின் வரலாறு









*Ceylon Tea* என்ற பெயருடன் பிணைந்த அந்த இதிகாசத்தை நினைவுகூரும் போது, சர் தோமஸ் லிப்டனின் பெயர் என்றென்றும் மறக்கப்பட மாட்டாது. அந்த வரலாற்று நினைவுகளுடன், ஊவா மாகாணத்தின் ஹப்புத்தளை மலைச் சரிவுகளில் அழகாகப் பரந்து விரிந்து கிடக்கும் தம்பதென்ன தேயிலைத் தோட்டம், சிலோன் டீ வர்த்தக நாமத்தை உலகத்திற்கு எடுத்து செல்ல ஒப்புரவாகாத பங்களிப்பை அளித்துள்ளது.

சேர் ஜேம்ஸ் டெய்லர் இலங்கைக்கு வருகை தந்த பின்னர், லூல்கந்துர தேயிலைத் தோட்டம் மற்றும் தொழிற்சாலையுடன் இணைந்து முதல் வணிக ரீதியான தேயிலை செய்கையைத் தொடங்கினார். சேர் ஜேம்ஸ் டெய்லர் மற்றும் சேர் தோமஸ் லிப்டன் ஆகியோர் இலங்கையின் தேயிலைத் தொழிலின் முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

தம்பதென்ன தேயிலைத் தோட்டத்தின் மலை உச்சியில் அமைந்துள்ள சேர் தோமஸ் லிப்டனின் குடியிருப்பு, 134 வருடங்களுக்கும் மேலாக இன்றும் அதன் பிரகாசத்துடன் நிலைத்து நிற்கிறது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையின் தேயிலைத் தொழிலின் மறக்கமுடியாத அத்தியாயத்தை நினைவூட்டுகிறது.

லிப்டன் தேயிலை வர்த்தக நாமத்தின் தோற்றமும் தூரநோக்குச் சிந்தையும் 1890இல் சேர் தோமஸ் லிப்டன் இந்த இடத்தை தேயிலைத் தோட்டமாகத் தேர்ந்தெடுத்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவது குளிர்ந்த காலநிலை இரண்டாவது மண் வளம், மூன்றாவது அதிக மழைப்பொழிவு ஆகியனவாகும். இலங்கையின் மத்திய மலைநாட்டின் இந்த சிறந்த காலநிலை அம்சங்கள், நாட்டின் தேயிலைத் தொழிலை உலக அளவில் முன்னணி நிலைக்கு உயர்த்தும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் இலங்கையின் மத்திய மலைப்பகுதியை உலகின் தேயிலை உற்பத்தி மையமாக மாற்றினார். தம்பதென்ன தேயிலை சுவையின் தனித்துவம் தொடர்பில் நன்றாக அறிந்து வைத்திருந்த சேர் தோமஸ் லிப்டன், அக்காலத்தில் தேயிலைத் தொழிலில் இருந்த குறுக்கீடுகளை உடைத்தார். தோட்டத்திலிருந்து நுகர்வோர் வீடு வரை அனைத்து இலங்கையர்களும் எளிதாகத் தேயிலை வாங்கும் வகையில் சந்தை தடைகளைக் குறைத்தார். இந்த முன்னோடி முயற்சியே, லிப்டன் வர்த்தக நாமத்தை உலகளாவிய தேயிலைப் வர்த்தக நாமமாக உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தது.

தற்போது தம்பதென்ன தேயிலைத் தோட்டம் 873 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. இதில் 376 ஹெக்டேர் பகுதியில் தேயிலை செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், 183 ஹெக்டேர் பகுதி காடுகளாகவும் சுற்றுச்சூழல் உணர்வுள்ள மண்டலமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது நவீன மேம்பாட்டு முயற்சிகளான, பழைய தேயிலைப் புதர்களுக்குப் பதிலாக புதிய தேயிலைச் செடிகள் நடவு செய்ய கணிசமான முதலீடு செய்யப்பட்டுள்ளது இதன் விளைவாக, தோட்டத்தில் உள்ள 74 % தேயிலைப் பகுதிகள் இப்போது நவீன ரகத் தேயிலைப் புதர்களால் ஆக்கப்பட்டுள்ளன இந்த முன்னேற்றம் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு உகந்ததாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றுவரை, தம்பதென்னவின் தனித்துவமான அடையாளம் பேணிக்காக்கப்பட்டு வருகிறது. தம்பதென்ன தேயிலைத் தோட்டம் சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமாக இருப்பதால், இப்போது இந்தத் தோட்டத்தின் தனித்துவமான தேயிலை சுவையை அனுபவிக்க ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, ஒரு புதிய தேயிலை விற்பனை மையம் திறக்கப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளுக்கும் மேலாக, தம்பதென்ன தோட்டம் தேயிலை உற்பத்தியில் ஒப்புயர்வற்ற சுவை கொண்ட தேயிலையை உருவாக்கி வருகிறது. இந்த சிறப்புச் சுவை இன்றும் அப்படியே உள்ளது, சேர் தோமஸ் லிப்டனின் அழியாத புகழை மேலும் 100 ஆண்டுகளுக்கு உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

### புதிய நிர்வாகத்துடன் மீண்டும் புத்துயிர் பெறும் தம்பதென்ன

தம்பதென்ன பெருந்தோட்ட தோட்டம் தற்போது லங்கெம் தேயிலை மற்றும் ரப்பர் பிளாண்டேஷன் பிரைவேட் லிமிடெட்டின் துணை நிறுவனமான அகரபத்தன பிளாண்டேஷன் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமானது, மேலும் உலக சந்தைக்கு உயர்தர தேயிலை தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் இந்தத் துறையில் முன்னணியில் உள்ளது. மேலும், தம்பதென்ன எஸ்டேட் உற்பத்தி செய்யும் தேயிலை பொருட்களின் தரம் மற்றும் தரத்தைப் பராமரிக்க, தம்பதென்ன பெருந்தோட்டம் ISO 22000:2018 மற்றும் ISO 9001:2015 தயாரிப்பு சான்றிதழ்கள் மற்றும் மழைக்காடு கூட்டணி போன்ற சுற்றுச்சூழல் தர சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. மேலும், முழு பெருந்தோட்டமும் பொலிதீன் இல்லாத மண்டலமாக மாற்றப்பட்டுள்ளது. தேயிலை உற்பத்திக்குக் கூடுதலாக, அகரபத்தன பெருந்தோட்ட கம்பெனி லிமிடெட் நீர் மின் உற்பத்தி, சூரிய மின் உற்பத்தி மற்றும் உயிரி எரிவாயு உற்பத்தி போன்ற ஆதாரங்களைப் பயன்படுத்திப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் பெருமளவில் முதலீடு செய்துள்ளது.

### பாரம்பரியத்தைப் பேணிய நவீனமயமாக்கல்

தம்பதென்ன தேயிலைத் தோட்டம் இலங்கையின் மிக நீளமான தேயிலை தொழிற்சாலையைக் கொண்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1,560 மீட்டர் முதல் 1,970 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்தத் தோட்டம், அதன் தனித்துவமான புவியியல் அமைவினால் நாட்டின் உயர்தர மலைநாட்டுத் தேயிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது. இந்தத் தொழிற்சாலை ஆண்டுதோறும் 7 இலட்சம் முதல் 10 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது இலங்கையின் பிற தேயிலை தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது மிக உயர்ந்த உற்பத்தித் திறன் கொண்டது 100 ஆண்டுகளுக்கும் மேலாக நிலை மற்றும் தரத்தைப் பேணியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தோட்டத்தின் மொத்த பரப்பளவில் 183 ஹெக்டேயர் வனத்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் 126.47 ஹெக்டேயர் பரப்பளவில் வணிக மதிப்புமிக்க மர வளர்ப்புக்காக ஒதுக்கப்படுகின்றன. கடல் மட்டத்திலிருந்து 5,000 அடிக்கும் மேல் உயரத்தில் அமைந்துள்ள இந்த வணிகக் காடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சிறந்த மாதிரியாகவும் சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தை ஈர்க்கும் திறன் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இயற்கை அழகு மிகுந்த இப்பகுதியில் சுற்றுலாத்துறையை பிரபல்யப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. மேலும் இயற்கை அழகு நிறைந்த காட்சிகளின் காரணமாக அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும்.

தம்பதென்ன தோட்டத்தில் இயந்திரம் மூலம் தேயிலை பறிப்பு (*Mechanical Tea Plucking*) ஒரு புதிய தொழில்நுட்பமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தேயிலைப் பறிப்பு திறன் கணிசமாக அதிகரித்துள்ளதுடன் சுற்றுச்சூழல் பாதிப்பு குறைந்துள்ளது. பசுமை உற்பத்தி நடவடிக்கையாகக் கழிவு நிர்வகிப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் குப்பை கூளம் மற்றும் தாவர எச்சங்களைப் பயன்படுத்தி உரம் தயாரித்தல், நிலையான தேயிலை உற்பத்தியின் ஒரு பகுதியாக இந்த முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தம்பதென்ன தேயிலைத் தோட்டம், பாரம்பரிய தேயிலை உற்பத்திக் கலை மற்றும் நவீன உற்பத்தி முறைகளைச் சிறப்பாக இணைத்து, தனித்துவமான சுவை கொண்ட உயர்தர தேயிலையை உலகிற்கு வழங்குகிறது.

இந்தப் பகுதியில் மிகப்பெரிய தோட்டத்தைப் பராமரிப்பதன் மூலம், தம்பதென்ன பெருந்தோட்டம் பாரம்பரியத்தைப் பாதுகாத்து தரமான தேயிலை உற்பத்தி செய்வதோடு, இந்த உற்பத்தி செயல்முறைக்கு பங்களிக்கும் ஊழியர்களின் வாழ்க்கையைப் பிரகாசமாக்கவும் முடிந்தது. அதன் நிறுவன சமூகப் பொறுப்புணர்வு அணுகுமுறையின் மூலம், தோட்டம் அமைந்துள்ள பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதன் மூலம் கல்வியில் திறமையான குழந்தைகளின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் இது ஒரு சிறப்பு பங்களிப்பைச் செய்கிறது. மேலும், ஊழியர் நலனில் அதிக கவனம் செலுத்தி வரும் தம்பதென்ன பெருந்தோட்டம், ஊழியர்களின் வசதிக்காக ஓய்வு அறைகள், தோட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கட்டப்பட்ட கழிப்பறைகள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வழங்குகிறது, மேலும் தோட்டத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் ஆண்டுதோறும் முழு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுகிறார்கள். இங்கு, ஊழியர்களின் எந்தவொரு நோயையும் கண்டறிந்த பிறகு, அவர்கள் மேலதிக சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

தம்பதென்ன தோட்டம், தங்கள் பணியாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக ஒரு பகல் காப்பக மையத்தை (*Day Care Center*) நடத்துகிறது. இங்கு குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது. மேலும் ஊழியர்களின் குழந்தைகள் பல்கலைக்கழக கல்வி பயிலும் போது அவர்களது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகக் கல்வி உதவித் தொகை (*Scholarships*) வழங்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுவசதி சிக்கல்களுக்கு தம்பதென்ன தோட்டம் உகந்த தீர்வுகளை வழங்கியுள்ளது. குறிப்பாக தனி வீடுகள் கட்டமைத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### பாரம்பரியத்தைப் பாதுகாத்த புத்தாக்க கதை

இலங்கையின் தேயிலைத் தொழிலின் சவால்களான உலக தேயிலை விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவற்றை தம்பதென்ன தோட்டமும் எதிர்கொண்டுள்ளது. எனினும், இந்த சவால்களை வாய்ப்புகளாக மாற்றி, தோட்டத்தின் முன்னோடி நிர்வாகம் சிறந்த தீர்வுகளை அமல்படுத்தியுள்ளது. அதன்படி இயந்திர முறையில் தேயிலை கொழுந்து பறிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் நட்பு தேயிலை உற்பத்தி முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சேர் தோமஸ் லிப்டன் அவர்களால் சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்த தேயிலைத் தோட்டம், இன்று தரமான தேயிலை உற்பத்தியில் முன்னணி வகிப்பதுடன், புத்தாக்கமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. மேலும் சமூகப் பொறுப்பை உயர்ந்த முறையில் கடைப்பிடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# “தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை”

தந்தையர் மற்றும் தந்தைவழி பிணைப்புகளைக் கொண்டாடும் தந்தையர் தினம் ஞாயிற்றுக்கிழமை (15) கொண்டாடப்பட்டது.

உலகளவில் வெவ்வேறு திகதிகளில் அங்கீகரிக்கப்பட்ட தந்தையர் தினம், ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை பொதுவாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நாள், தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் பெரும்பாலும் பாதுகாவலர்களாகவும், வழிகாட்டிகளாகவும், முன்மாதிரியாகவும் செயல்படும் தந்தையர்களின் தன்னலமற்ற பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த தினம், தந்தையர் வழங்கும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, உணர்ச்சிப்பூர்வமான ஆதரவு மற்றும் வழிகாட்டுதலைக் கௌரவிக்கிறது.

ஒரு நண்பராகவோ, ஆலோசகராகவோ அல்லது நிலையான வலிமையின் மூலமாகவோ, ஒரு தந்தை வகிக்கும் பல பாத்திரங்களுக்குக் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்க வேண்டிய தருணம் இது.

தந்தையர் தினத்தின் தோற்றம் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமெரிக்காவிலிருந்து தொடங்குகிறது.

இந்த யோசனையை வொஷிங்டனின் ஸ்போகேனைச் சேர்ந்த சோனோரா ஸ்மார்ட் டாட் அறிமுகப்படுத்தினார்.

அவர் அன்னையர் தினத்தால் ஈர்க்கப்பட்டு, ஆறு குழந்தைகளைத் தானே வளர்த்த உள்நாட்டுப் போர் வீரரான தனது தந்தை வில்லியம் ஜாக்சன் ஸ்மார்ட்டை கௌரவிக்க விரும்பினார்.

இதையடுத்து முதல் தந்தையர் தினம் 1910 ஜூன் 19, அன்று கொண்டாடப்பட்டது.

1972ஆம் ஆண்டு ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டு, அதை ஒரு தேசிய விடுமுறையாக மாற்றியபோது அமெரிக்காவில் இது அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தைப் பெற்றது.

அதன் வரலாற்றைத் தாண்டி, தந்தையர் தினம் குடும்பப் பிணைப்புகளை வலுப்படுத்த ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகச் செயல்படுகிறது.

பகிரப்பட்ட அனுபவங்கள் மற்றும் தரமான நேரம் மூலம், தந்தையர்கள் தங்கள் வாழ்க்கையிலும் வளர்ச்சியிலும் ஏற்படுத்தும் நீடித்த தாக்கத்தை குடும்பங்கள் கொண்டாடும் தினமாக இது அமைந்துள்ளது.

## வரலாறு மற்றும் முக்கியத்துவம்:

வொஷிங்டனை சேர்ந்த ‘சோனோரா ஸ்மார்ட் டோட்’ என்ற பெண்மணி,1909ஆம் ஆண்டில் ஒருநாள் தேவாலயத்தில் அன்னையர் தின போதனையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவருக்குத் தந்தையர் தினத்தைப் பற்றிய யோசனை தோன்றியது. தாய் இல்லாததால் தந்தையின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். அன்னையர் தினத்திற்குச் சமமான அதிகாரப்பூர்வ தினத்தைத் தந்தைக்கு நிறுவ விரும்பினார். அதன்பின் அதிகாரப்பூர்வ தந்தையர் தினத்தைக் கடைப்பிடித்து தந்தையர்களை கௌரவப்படுத்துவதற்கான யோசனையை இவரே முதன்முதலில் முன்மொழிந்தார். 1910ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் திகதி, முதல் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது. 1913ஆம் ஆண்டில் இதற்கான ஒரு மசோதாவும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1966ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ‘லிண்டன் பி.ஜான்சன்’ ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாகக் கொண்டாடப்படும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். தந்தையர் தினத்திற்கான நாள் ஒவ்வொரு நாடுகளுக்கும் வேறுபடுகிறது. போர்த்துகல், இத்தாலி, குரோஷியா போன்ற பல நாடுகள் மார்ச் 19ஆம் திகதியைத் தந்தையர் தினமாகக் கொண்டாடுகின்றனர். தந்தையர் தினம் 1972இல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனால் தேசிய விடுமுறையாகவும் அறிவிக்கப்பட்டது. மேலும் தென் கொரியாவில் தந்தையர் தினத்தைப் பெற்றோர் தினமாக அனுஷ்டிக்கின்றனர்.

தந்தையர்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறார்கள். குழந்தைகள் தந்தையர்களை முன்மாதிரியாகக் கருதுகின்றனர். அவரைப் போல தாங்களும் ஆக வேண்டும் என விரும்புகிறார்கள். குடும்பத்தின் வாழ்வுக்காகவும், அவர்களின் மகிழ்ச்சிக்காகவும் இரவு, பகல் பாராமல் உழைக்கும் குடும்பத்தின் தூண்கள் தந்தையர்கள். எந்தவொரு குழந்தைக்கும், அவரின் தந்தை தான் முதல் ஹீரோ. ஒரு தந்தை நம் வாழ்க்கையில் செய்யும் பங்களிப்புகளுக்கும், தியாகங்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வாய்ப்பை இந்த நாள் அளிக்கிறது.

## கொண்டாட்டங்கள்:

தந்தையர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. உங்கள் அப்பாவுடன் தரமான நேரத்தைச் செலவிடுவதன் மூலம் இந்த சந்தர்ப்பத்தை மறக்கமுடியாததாக மாற்றலாம். திரைப்பட இரவை ஏற்பாடு செய்வது, புத்தகங்களைப் பரிசளிப்பது அல்லது அவர் செய்ய வேண்டிய சில பட்டியலை முடிப்பது போன்ற சிறப்பு பரிசுகளையும் தயாரிக்கலாம். நீங்கள்

## கொண்டாடும் முறைகள்:

தந்தையர் தினத்தை ஒவ்வொருவரும் கொண்டாடும் முறை உள்ளது. இந்த நாளில் பலர் நல்ல உணவை உண்பதற்காக வெளியே செல்கிறார்கள். குழந்தைகள் தங்கள் தந்தைக்குப் பரிசுகளை வழங்குவார்கள், அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பார்கள், அட்டைகள் மற்றும் பூக்களை வழங்குவார்கள்.

இந்த நாளில், ஒவ்வொரு குழந்தையும் தனது தந்தைக்கு நன்றி செலுத்துகிறது.

தன் குழந்தைகள் மற்றும் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பவருக்கும் தாய்க்கு இணையான மரியாதை கிடைக்க வேண்டும்.

எப்படி அன்னையர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோமோ, அதே போன்று தந்தையின் அன்பைப் போற்றும் வகையில் தந்தையர் தினம் கொண்டாட வேண்டும்.

தன் துக்கத்தையும், வேதனையையும் வெளிக்காட்டாமல் தன் கடமைகளை எல்லாம் செய்பவர் தந்தை. அம்மாவுக்குப் பிறகு நம் மனதுக்கு மிக நெருக்கமானவர் என்றால் அது நம் அப்பாதான்.

தந்தையின் அன்பு அன்னையைப் போல் இல்லை, ஆனால் அப்பாதான் நம்மை உள்ளிருந்து வலிமையாக்குகிறார்.

உலகில் உள்ள நல்லது கெட்டது பற்றி எங்கள் தந்தை நமக்குப் பாடம் நடத்துகிறார். நம் தந்தையின் கை நம் நெற்றியில் இருக்கும் வரை நாம் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.

எப்பொழுதும் துக்கத்தை தனக்குள்ளேயே வைத்துக்கொண்டு நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறார்.

நாம் வாழ்க்கையில் அப்பாவின் பங்கு முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை.

குடும்பத்தில் சமத்துவத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதில் உங்கள் இருப்பு முக்கியமானது. ஒருவர் வளரும்போது அவரைப் போல இருக்கத் தேவையான பண்புகளை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

குடும்பத்தைப் பொறுப்பாக வழிநடத்தி, தன்னலமற்ற அன்பின் அடையாளமாகத் திகழும் தந்தைகள் ஒவ்வொருவரும் ஆண்டு முழுவதும் கொண்டாடப் பட வேண்டியவர்கள் தான்.

‘தந்தை சொல் மிக்க மந்திரமில்லை’ என்பது சான்றோர் வாக்கு. அப்படிப்பட்ட அப்பாக்களுக்கு, நாம் இன்றைய தினத்தை அவர்களுக்காக அர்ப்பணிப்போம். அனைத்து அப்பாக்களுக்கும் ‘இனிய தந்தையர் தின வாழ்த்துக்கள்!’.



# மலையகத்திலிருந்து பாத யாத்திரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க ருஹுணு கதிர்காம ஆலயத்தில் நடைபெறும் (2025)ஆம் ஆண்டிற்கான எசல பெரஹராவில் பங்கேற்க மலையகத்திலிருந்து பாத யாத்திரை செல்லும் முதல் குழு சனிக்கிழமை (14) அன்று மதியம் மஸ்கெலியா சாமிமலை பகுதியில் இருந்து பயணத்தைத் தொடங்கினர்.

இந்தக் குழு சனிக்கிழமை(14) அன்று நோர்வூட் இந்து ஆலயத்திற்கு வந்து ஓய்வெடுத்த, பின்னர் ஞாயிற்றுக்கிழமை (15) அன்று தலவாக்கலை நகரத்திற்கு வந்து அங்கிருந்து தங்கள் பயணத்தை மீண்டும் தொடங்கினர். அவர்களில் 22 பேர் பங்கேற்றுள்ளதுடன் அவர்கள் மஸ்கெலியா, சாமிமலை, ஹட்டன், நுவரெலியா, வெலிமடை , பண்டாரவளை, வெல்லவாய, தனமல்வில, கும்பல் காம, புத்தள மற்றும் யால ரிசர்வ் வழியாக 275 கிலோமீட்டர் தூரம் நடந்து செல்வதாக தெரிவித்தனர்.


செல்லும் பாதையில் உள்ள மத இடங்கள் மற்றும் ஓய்வு இல்லங்களில் இரவு நேரத்தில் தங்கியிருந்து, ஓய்வுபெற்று, மறுநாள் மீண்டும் பயணத்தைத் தொடங்குவார்கள் என தெரிவித்தனர்.

பாதையின் இருபுறமும் உள்ளவர்களால் பக்தர்களுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்கப்படும் என்றும் பக்தர்கள் தெரிவிக்கப்படுகிறது.

- எம்.கிருஸ்ணா
















இஸ்ரேல்

## டெஹ்ரானை "எரித்து விடுவோம்"

தங்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

இல்லையென்றால் டெஹ்ரானை எரித்து விடுவோம் என அந்த நாட்டு இராணுவ அமைச்சர் கேட்ஸ் மிரட்டல் விடுத்துள்ளார்.

இதன்படி தங்கள் போர் விமானங்கள் ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்பை உடைத்துக்கொண்டு எளிதாக டெஹ்ரானை அடைந்து வருவதாகவும் இஸ்ரேல் தெரிவித்து வருகிறது.

இவ்வாறு இஸ்ரேலும், ஈரானும் தங்கள் தாக்குதலை தொடர்வதில் உறுதியாக இருப்பதால் மத்திய கிழக்கில் உச்சக்கட்ட போர்ப் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் வீசிய ஏவுகணையால் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இரண்டு முக்கிய எண்ணெய்க் கிடங்குகள் பற்றி எரிந்து வருவதாக, ஈரானிய எண்ணெய் அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

ஈரானிய எண்ணெய் அமைச்சகத்தின் தகவல்படி, டெஹ்ரானின் வடமேற்கே உள்ள ஷாஹ்ரானில் உள்ள எண்ணெய் கிடங்குகளும், நகரத்திற்கு தெற்கே உள்ள மற்றொன்றும் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் பாதுகாப்புப்படை தற்போது வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது,

ஈரானிய ஆட்சியின் அணு ஆயுதத் திட்டம் தொடர்பான டெஹ்ரானில் உள்ள இலக்குகள் மீது ஐ.டி.எப். விரிவான தொடர் தாக்குதல்களை நடத்தி முடித்தது. இலக்குகளில் ஈரானிய பாதுகாப்பு அமைச்சக தலைமையகம்,


எஸ்.பி.என்.டி. அணுசக்தி திட்டத்தின் தலைமையகம் மற்றும் கூடுதல் இலக்குகள் ஆகியவை அடங்கும், இது ஈரானிய ஆட்சி அணு ஆயுதத்தைப் பெறுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றதற்காக மற்றும் ஈரானிய ஆட்சி அதன் அணு ஆயுதக் காப்பகத்தை மறைத்து வைத்திருந்ததற்காக இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்

## சிக்கலில் விமான போக்குவரத்து

இஸ்ரேல்-ஈரான் நாடுகளுக்கு இடையேயான தாக்குதலால் மத்திய கிழக்கு வழியான விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் தங்கள் வான்பகுதியை மூடியுள்ள நிலையில், சர்வதேச நாடுகளின் விமானங்கள் அந்த வழியான போக்குவரத்தை இரத்து செய்துள்ளன.





உத்தரகாண்ட்

## ஹெலிகொப்டர் விபத்து: 7 பேர் பலி

உத்தரகாண்ட் மாநிலம், கௌரிகுந்த் அருகே, ஞாயிற்றுக்கிழமை (15) டேராடூனில் இருந்து கேதார்நாத் நோக்கிச் சென்ற ஹெலிகொப்டர் காணாமல் போனதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

காணாமல் போன ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதை உத்தரகாண்ட் சட்டம் மற்றும் ஒழுங்கு கூடுதல் இயக்குநர் ஜெனரல் (ஏடிஜி) முருகேசன் உறுதிப்படுத்தினார்.

இந்நிலையில், அந்த ஹெலிகொப்டரில் பயணம் செய்த அனைவரும் (7 பேர்) இறந்து விட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அதில் விமானி மற்றும் 5 பெரியவர்கள், 1 குழந்தை இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தின் மேல் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கிய புனிதத் தலமான கேதார்நாத்துக்கு ஹெலிகொப்டர் சென்று கொண்டிருந்தபோது, கீழே விழுந்து நொறுங்கியதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரை தேடுதல் மற்றும் மீட்புப்பணிகளைத் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரான்

## 'பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை'

அமெரிக்கா-ஈரான் இடையேயான அணுசக்தி ஒப்பந்த பேச்சுவார்த்தை ஞாயிற்றுக்கிழமை(15) அன்று ஓமனில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் இந்த தாக்குதல் காரணமாக இந்த பேச்சுவார்த்தை நடைபெறுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் மீது இஸேரல் தாக்குதல் நடத்திவரும் சூழலில், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை என ஈரான் கூறியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் இஸ்மாயில் பாகேய் கூறுகையில், "பேச்சுவார்த்தையை அர்த்தமற்றதாக்கும் வேலையை அமெரிக்கா செய்து உள்ளது" என தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இஸ்ரேல் தனது தாக்குதல் நடவடிக்கை மூலம் ஈரானின் அனைத்து சிவப்புக் கோடுகளையும் கடந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.



பாகிஸ்தான்

## ஈரானுக்கு பாகிஸ்தான் ஆதரவு

ஈரானுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிப்பதாக, அந்த நாட்டின் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் உடன் ஷெபாஸ் ஷெரிப் பேசியுள்ளார். ஈரான் மீதான இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து இந்த இக்கட்டான நேரத்தில் தங்கள் தேசம் ஈரானுக்கு ஆதரவாக நிற்பதாக ஷெபாஸ் ஷெரிப் கூறியுள்ளார்.

பிரித்தானியா

## ஒரே இரவில் 30,000 முறை மின்னல் தாக்கம்

பிரித்தானியாவில், ஒரே இரவில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறை மின்னல் தாக்கியதாகப் பதிவானது.

அவற்றில் பல மின்னல்கள் கடல் பகுதியில் பதிவாகியுள்ளன.

இதைத்தொடர்ந்து, பிரித்தானியாவின் வடக்கு பிராந்தியத்தில் அடைமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து அயர்லாந்து, ஸ்காட்லாந்திலும் அடைமழை பெய்வதற்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மின்னல் தாக்கியதில் அங்குக் காட்டுத்தீயும் ஏற்பட்டது. தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து சென்று தண்ணீரைப் பீய்ச்சியடித்தனர். அவர்களது சில மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அதேபோல், மின்னல் காரணமாக விமானம் தரையிறங்குவதில் சிக்கல் நிலவியது.




## தேசிய கூடைப்பந்தாட்டத் தொடர்: சம்பியனானது காரைதீவு அணி

■ வி.ரி.சகாதேவராஜா

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 23 வயதுக்குட்பட்ட வீரர்களை உள்ளடக்கிய தேசிய மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் அம்பாறை மாவட்ட அணி சம்பியனானது.

அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை காரைதீவு கூடைப்பந்தாட்ட கழக அணியினர் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

இலங்கையின் 15 மாவட்டங்களின் பங்குபற்றுதலுடன் மாத்தறையில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் பதுளையை 53-50 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றே அம்பாறை சம்பியனானது.

## உபகரணங்கள் வழங்கி வைப்பு

■ நூருல் ஹுதா உமர்

கிழக்கு பிராந்திய முன்னணி மற்றும் மூத்த விளையாட்டு கழகங்களில் ஒன்றான மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டு கழகத்தின் தலைவர் அல்ஹாஜ் கலீல் முஸ்தபாவால் கோல்ட் மைன்ட் கிரிகெட் கழகத்தினருக்கு புதிய சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு மருதமுனை பிரதான வீதி முஸ்தபா ட்ரேட் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.




## சம்மேளனத் தலைவர் ஜஸ்வரைச் சந்தித்த புத்தளம் லீக்

■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முஹம்மது யமீன், செயலாளர் அப்துல்லா முறாத் மற்றும் பொருளாளர் முஹம்மது ரஸ்லான் ஆகியோர் புதன்கிழமை (11) இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவரான ஜஸ்வரைச் சந்தித்து புத்தளத்தின் உதைபந்தாட்ட அபிவிருத்தி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

எதிர்வரும் காலங்களில் பல்வேறு கால்பந்தாட்டத் தொடர்கள் மற்றும் நிதி அனுசரணைகளை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் ஊடாக புத்தளம் கால்பந்தாட்ட லீக்குக்கு வழங்குவதாக ஜஸ்வர் இதன்போது லீக்கின் நிர்வாகிகளிடம் உறுதியளித்தார்.




மேலும் லீக்குக்கு முதல் கட்டமாக ஐந்து பந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் முன்னாள் செயலாளரும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன முன்னாள் பொருளாளருமான ஜே.எம்.ஜெளஸியின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: அவுஸ்திரேலியாவை வீழ்த்தி சம்பியனான தென்னாபிரிக்கா

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் தென்னாபிரிக்கா சம்பியனானது.

லோர்ட்ஸில் புதன்கிழமை(11) ஆரம்பமாகி சனிக்கிழமை(14) முடிவுக்கு வந்த அவுஸ்திரேலியாவுடனான இறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே தென்னாபிரிக்கா சம்பியனானது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியா: 212/10 (துடுப்பாட்டம்: பியூ வெப்ஸ்டர் 72, ஸ்டீவன் ஸ்மித் 66 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 5/51, மார்கோ ஜன்சன் 3/49, ஏய்டன் மார்க்ரம் 1/5, கேஷவ் மஹராஜ் 1/19)

தென்னாபிரிக்கா: 138/10 (துடுப்பாட்டம்: டேவிட் பெடிங்ஹாம் 45, தெம்பா பவுமா 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 6/28, மிற்செல் ஸ்டார்க் 2/41, ஜொஷ் ஹேசில்வூட் 1/27)

அவுஸ்திரேலியா: 207/10 (துடுப்பாட்டம்: மிற்செல் ஸ்டார்க் ஆ.இ 58, அலெக்ஸ் காரி 43 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 4/59, லுங்கி என்கிடி 3/38, ஏய்டன் மார்க்ரம் 1/5, வியான் முல்டர் 1/18, மார்கோ ஜன்சன் 1/58)

தென்னாபிரிக்கா: 282/5 (துடுப்பாட்டம்: ஏய்டன் மார்க்ரம் 136, தெம்பா பவுமா 66 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/66, ஜொஷ் ஹேசில்வூட் 1/58, பற் கமின்ஸ் 1/59)

போட்டியின் நாயகன்: ஏய்டன் மார்க்ரம்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 16, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது